முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 2 | 17—2—56 | வெள்ளி | ஒலி 46

கொடியேற்று விழா!

டண்—டண்—டண்—டம—டம—டம—டம!

முரசு முழங்கிவிட்டது—உரிமைக் கொடி உயர்ந்து விட்டது! ஊராளும் சீமான்களின் ஊமை விரதத்தைக் கலைப்பதற்காகத் திரண்டெழும் திண்தோள் வீரர்களின் தீ பறக்கும் கண்களிலேயிருந்து கேள்விக் குறிகள் புறப்பட்டுவிட்டன. அடைத்த காதும், திறக்காத விழியுங் கொண்டு — துரைத்தனம் புரியும் துப்பாக்கி வேந்தர்களின இருதயத்திலே ஊடுருவும் வண்ணம் எழுச்சி கீதம் பாடப்படுகிறது.

"எல்லை காக்கும் வீரர்களே! எம்மிடமோ உம் கை வரிசை" எனப் பல்லைக் கடிக்கும் பண்டிதர்களுக்குப் பாடம் புகட்ட தமிழர் பட்டாளம் எழுந்து விட்டது!

"சின்னத்தனமிது! செல்லாக் காசாக்கி விடுவோம்!" என சிம்மக் குரல் கொடுத்த அமிர்த சரஸ் நோக்கி, சிங்காரத் தமிழகம் எதிர்க்குரல் கொடுத்து விட்டது — ஆயிரம் அரிமாக்கள் கூடினும் அந்தக் குரல் கண்டு குலை நடுக்க மெடுத்தோடித்தான் தீரவேண்டும்! போராட்டம் தொடங்கி விட்டோம் தோழர்களே; போராட்டம் தொடங்கி விட்டோம்—இந்தப் பரணி பாடாத தமிழனைத் தாயகத்தில் யாரும் காண முடியாது! தாய் நாடு காக்க எழுந்தவரெல்லாம் தமிழர்—எழாதவர் சந்தேகத்திற்குரியவர்—எதிர்ப்பவர் விபீஷணன் வாரிசு—எனத் தக்க விதத்திலே போர் மூண்டு விட்டது! அறப்போர்! அமைதி வழி நின்று அகம்பாவக்காரர்களுக்கு அறிவு புகட்டும் போர்! கன்னலடா எந்தன் நாடு; அதைக் காயப்படுத்துவோர்க்கு இந்த வாள் வீச்சு மின்னலடா — என்று கடமைப் போர்வாள் ஏந்திக் களம் புகத் தலைப்பட்டு விட்டனர், தமிழரெல்லாம்!

"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள்!"

"பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!"

என்ற புரட்சிக் கவிஞரின் வீரவரிகளை பொன்னிதழால் தழுவி, 'கன்னி, நீ தரும் சுவையும் எம் கற்கண்டுத் தமிழுக்கு ஈடாமோ!' எனத் தமிழ் தொழுது, அமிழ்தினுமினியதம்மா இந்நாடு—எனக் கச்சை கட்டி கட்கமேந்தி வரும் அறப்போர் இளைஞர்களின் நடையிலே தான் எனன மிடுக்கு! என்ன மிடுக்கு!!

"வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம்—உள்ளத்தால் ஒருவரே, மற்றுடலினால் பலராய்க் காண்பார்!" என்ற கவிஞரின் கனவு பலித்து விட்ட காட்சியைத் தாயகம் காணுகிறது!

எல்லாக் கட்சித் தலைவர்களும்—வெல்லத் தமிழ் மொழியின் பெயரால்—ஒன்று பட்டு நிற்கும் உணர்ச்சி மிகு சம்பவம்—உள்ளத்தை உருக்குகின்ற நிகழ்ச்சி—நடக்குமா என்று எதிர்பார்த்தது; நடந்தே விட்டது! நமது நாவலருடன் நடராசனும், மறத்தமிழர் ம. பொ. சிவஞானமும், சிங்க நெஞ்சர் ஜீவானந்தமும், அமிர்விலா அந்தோனியும், அன்பர் சுப்ரமணியமும் ஆகா; அத்தனைத் தமிழ்ப் பெருமக்களும் அரசியல் மேதை இராசனின் தலைமையின் கீழ் நின்று ஒற்றுமைக் கொடிக்கு வணக்கம் செலுத்தும் காட்சி கண்டோர். வாழ்விலே ஒரு நற்பேறு கண்டோர்! நன்றும் கண்டோர்!

செழிப்பு சிரிக்கும் தோட்டங்கள்!

வளங் கொஞ்சும் நிலங்கள்!

மலை தழுவும் முகிலும், முகில் தழுவும் அகிலும் கொண்ட பொன்னாடு—தென்னாடு!

இதைச் சிதைத்து சீரழித்து தனது ஆதிபத்யத்தின் கீழ் மிதித்து வாழ விரும்பும் வடநாடு!

இரண்டுக்குமிடையே மூண்டு விட்டது போர்!

இழித்துரைத்தான் தமிழனை என்ற செய்தி செவியில் பட்டதுதான் தாமதம்—சேரனின் படைகள் இமயமலையை முட்டின என்று சிலப்பதிகாரம் செப்புகிறது! கசடரின் முடி நெறித்துக் கல்லேற்றி வந்த காதை தமிழருக்குச் சொந்தம்! பனி மூடிய இமயத்தின் பாறைகளிலே தமிழனின் பாதம் பதிந்த தழும்புகள் உண்டு!

அந்த இமயத்தின் அடித்தளத்திலே அமர்ந்து கொண்டு,

★ தொடர்ச்சி 6-ம் பக்கம்

★ பிப்ரவரி 20 மறவாதீர்! ★

எரிமலை உச்சியில் எறும்புப் புற்று!

இலட்சிய முகடு நோக்கி நடை பழகும் தோழர்கள் உலகத்தின் எந்த மூலையிலே இருந்தாலும் நம் இதயங்களிலே இடம் பெற்றுவிடுகிறார்கள். ஆதிக்கவெருமைகளின் முரட்டுச் குளம்புகளின் அடியிலே சிக்குண்டு, சிந்தும் ரத்தத்தையும் துடைத்திட முடியாமல், திணறித் தவித்திடும், அழுத்தப்பட்டோர் சார்பிலே வாதாடும் விடுதலைப் படையினர் உள்ளத்தால் உணர்வால் ஒன்றுபட்டு விடுகின்றனர்.

எங்கோ இருந்த பிசிராந்தையார் - எப்பொழுதுமே பார்த்தறியாத கோப்பெருஞ் சோழனின் இதயத்திலே இடம் பிடித்துக் கொண்டார், என்ற இலக்கிய நிகழ்ச்சியை உணர்ந்தவர்களுக்கு இது தெளிவாக புரிந்து விடும். கொடுமைகளை எதிர்த்து — அந்த முயற்சியிலே செத்து, ஆனால் இலட்சியங்களை சாக விடாமல் காப்பாற்றிய உத்தமர்கள், உலக வரலாற்றின் ஜோதி விளக்குகளாக நம் கண் முன்னால் நிற்பதற்கும் காரணம் அதுதான்!

நாம் செல்லுகின்ற பாதையிலே, அந்தப் புரட்சியாளரின் அடிச்சுவடுகள் ரத்தக் கறைகளுக்கிடையிலே ஆழமாக பதிந்திருப்பதால்தான்—நம்மையும் அறியாமல் சிரம் தாழ்த்துகிறோம்; அந்த செம்மல்களின் பாத முத்திரைகளுக்கு மரியாதை செலுத்துகிறோம்.

குகைவிட்டுக் கிளம்பிய புலிகளாய்—பகைக் குலத்தை நோக்கி அவர்கள் எழுப்பிய உரிமைக் குரல், அதிகார சீமாட்டியின்இதழ் தரும் சுவையிலே மயங்கி— ஆதிக்க மஞ்சத்திலே புரண்டு கொண்டிருந்த 'காலம்' உணராத காட்டு ராஜாக்களுக்கு கேலிக் குரலாகத்தான் கேட்டதாம்!

ஆரம்ப காலத்திலே — கேலிக் குரலாக கேட்ட அதே உரிமைக் குரல்தான்—உலக சரித்திரத்திலேயே முதல் முதலாக ஒரு சிறைச்சாலையை — பிரான்சு நாட்டின் சாவுக் கிடங்கை, பாஸ்டிலி என்ற பயங்கரக் கோட்டையைதவிடுபொடியாக்கி, விழிகளிலே அனல் தேக்கி எழுந்தவர்களின் இதயக் குமுறல் எத்தகைய சக்தி வாய்ந்தது என்பதை உணர்த்திற்று.

★

'கச்சிச் சிருக்கினும், திச்சிச் சிருக்கும்' தேக காந்தியிலே மயங்கிக் கிடந்த கொடுங்கோலர்களை-பாம்படோர் போன்ற கண் வெட்டுக்காரிகளின், கை வளைவிலே, புரண்டபடி, 'பட்டோ—பழக் கதுப்போ, உன் கன்னங்கள்' என்று கொஞ்சிக் கிடந்த பதினாலாம் லூயிகளை—

நித்தில நகை மீட்டி — நெஞ்சத்தை சூறையாடி, 'சுகம் இதோ' என்று சுந்தர இதழ் காட்டும் சரசிகளே கதியெனக் கிடந்த சுக போகிகளை—

தெருப் புழுதியிலே நெளிந்தபடி இருந்த அந்த தேய்ந்து போனவர்களின் அனல் மூச்சுதான் திரும்பிப் பார்க்க வைத்தது!

★

மோகத் தட்டிலே மிதந்து கிடந்த சீமான்களுக்கு; அந்தி வானத்தின் சிவப்பு கூட அழகிகளின் அதரமாகத்தான் தோற்றமளித்தது!

கோபுரத்தின் உச்சியிலே இருந்த ஆதிக்க வாதிகளுக்கு, ஆர்ப்பரிக்கின்ற அலைகடல்கூட, பளிங்குத் தடாகமாகத்தான் காட்சியளித்தது.

இறுமாப்பு இதயங்களில் கூத்தாட—அந்தஸ்து மாளிகையில் நின்ற அந்த உல்லாச புருடர்களின் செவிகளுக்கு, ஆர்த்தெழுந்த மக்களின இதய கீதம், லட்சிய முழக்கம், உரிமைக்குரல் எல்லாம், வேலையற்றவர்களின் வெறிக்கூச்சலாகத்தான்கேட்டது! ஆனால் அந்தக் கேளாக் காதர்கள் எல்லாம், பயங்கர முடிவைத் தழுவ நேர்ந்த பரிதாபத்தை,திடுக்கிடும் விதத்திலே சரித ஏடுகள் நமக்குச் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

★

கூட்டுப் புழு தனக்கு வேண்டிய கல்லறையை தானாகவே உருவாக்கிக் கொள்ளுமாம்! அதைப் போல,

அசோக சக்கரத்தின் கீழ் தர்பார் நடத்தும் இந்திய சர்க்காரோ தங்கள் அஸ்தமனத்திற்கான ஏற்பாடுகளில் அவசர அவசரமாக இறங்கி இருக்கின்றனர்.

சர்வாதிகாரிகள் முயன்று தோற்ற வழிகளில்-என்னென்ன மிச்சமிருக்கிறது என்று தேடிப் பிடித்து,அந்தப் பாதையிலே நடைபோட ஆரம்பித்திருக்கின்றனர்,

ஆண்டாண்டு காலமாக சிந்தித்து அறிஞர்கள் உலகிற்குத் தந்த 'ஜனநாயகம்' என்ற அழகான சொல்லுக்கு மாசு கற்பித்து வருகிறார்கள்.

"நீதி வேண்டும். எங்களைக் கட்டியாள நீ யார்?" என்று உரிமைக் கொடியை உயர்த்திப் பிடித்திருப்பவர்களின் முழக்கம், வெறிக் கூச்சலாம்! சொல்லுகிறார்! இந்திய மண்ணின் முடி புனையாத தார்வேந்தராம், நேரு பண்டிதர்.

இப்படி இறுமாப்பு மொழி சிந்திபவர்களை யெல்லாம், சரித்திரம் 'சர்வாதிகாரி'கள் என்ற பெயரிலேதான் அழித்திருக்கிறது.

ஆனால், இங்கே இவருக்கு பெயர், ஜனநாயக ஜோதி! சமாதானத்தின் தூதுவர்!

இதைக் கேட்கும்போது, அவர் கையிலே இருக்கும் வெண்புறாகூட வெட்கத்தால் தலை குனிந்து கொள்ளுகிறது; ஆனால் இங்குள்ள காங்கிரஸ் திராவிடர்களில் இன்னும் சிலர் 'தேவ தேவா' என்று திசை நோக்கி தெண்டனிட்டபடியே இருக்கின்றனர்.

முன்பொரு முறை கிருபளானி குறிப்பிட்டார், 'அழிந்த இனி அழியப் போகும் சாம்ராஜ்யங்களின் சுடுகாடு டெல்லி' என்று!

அந்த சுடுகாட்டிலே நின்று கொண்டுதான் ஜனநாயகக் குழந்தையின் குரல்வளையை நெறித்து - கோர தாண்டவமாடுகிறார் பண்டிதர்! உடன் இருக்கும் சீட கோடிகளோ, 'அவரே' என்று 'ஏ' காரம் போட்டு விட்டு இளித்த வாயர்களாக கைகட்டி நிற்கின்றனர்!

ஏக இந்தியா என்ற மாயக் காரியை—மயக்கும் விழியாளை, கொன்று கூறு போட, உறை கழற்றிய வாளோடு, எதிர்ப்புகள் கிளம்பியிருக்கும் இந்த நேரத்திலே, 'பாரத ஜோதிக்கு' படபடப்பும், பரபரப்பும், ஏற்பட்டிருக்கிறது. தகுதியைக் குறைத்துக் கொண்டு எதைப் பேசுவது என்றுகூட தெரியாமல், இழி சொற்களை உமிழ்ந்து கொண்டு திரிகிறார்.

மிகப் பெரிய மனிதர்தான்; ஆக்ஸ்போர்டு சாணையிலே அறிவிற்கு கூர் ஏற்றியவர்தான்; புகழ்க் கோபுரத்தின் உச்சியிலே நிற்பவர்தான்; அத்தகையவர் குப்பை மேட்டிலே குதித்துப் புரளுகிறார் என்றால், அதை நாம் எப்படிக் குறிப்பிடாமலிருக்க முடியும்?

★

தீ பற்றி நகரம் அழிந்த பிறகாவது நீரோ மன்னன், அந்தப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து, கண்ணீர் விட்டானாம்!

என்றாலும் வரலாறு அவனை, நேர்மையற்றவன், நெஞ்சிலே ஈரமில்லாதவன், சர்வாதிகாரி என்ற வார்த்தைகளால்தான் அழைக்கிறது!

'அய்யோ' என்ற அழுகுரல் எழுந்தபோதும், அந்த அழுகுரல் அடங்கி சுடுகாட்டு அமைதி நிலவியபோதும், அந்தப் பகுதி நோக்கி விழிகளைத் திருப்பாத இந்த 'நவீன செங்கிஸ்கானுக்கு' எந்த வார்த்தை மிச்சமிருக்கிறது பொருத்திப் பார்க்க!

மிரட்டலைக் கண்டு அஞ்ச மாட்டாராம்! இவரென்ன? இவருக்கு முன்னாலே உருட்டிவிடப்பட்ட எத்தனையோ முரடர்கள் கூடத்தான் எதற்கும் அஞ்சாத இரும்பு நெஞ்சர்களாக கொலு வீற்றிருந்தார்கள்.

ஆனால் காலம் அவர்களை சுலபத்தில் சாக விட்டதாகத் தெரியவில்லை!

அதிகாரக் குரல்வளையை அணு அணுவாக நசுக்கிக் கொண்டிருக்கிறது.

★

ஆவடிக்குப் பின்னால் — இந்த மண்ணிலே உருவாகிஇருக்கும் எதிர்ப்புணர்ச்சியும், எழுச்சியும் நேரு பண்டிதரின் நெஞ்சத்திலே எரிச்சலையும், புகைச்சலையும் உண்டாக்கி இருக்கிறது; அதன் சாரமாகத்தான் அமிர்தசரசில் எரிமலையாகி இருக்கிறார்; தீப்பந்தங்களென சுடு வார்த்தைகளை அள்ளிவீசி இருக்கிறார்.

'தமிழன்' என்ற ஒரே தகுதியை மூலதனமாக வைத்து முதல் அமைச்சராகிவிட்ட சாதாரண காமராசரே — 'கட்டை விரலை நறுக்கி விடுவேன்' என்று கனைக்கும் போது—

'என் அன்னை சீதையையும், என் அப்பன் ராமனையும் பழிப்பவர்களைகொலை செய்துவிடுவேன்' என்று சட்ட சபையிலே, கத்தியைக் காட்டி கூச்சல் போடுகிற அளவிற்கு- 'அகிம்சாவாதிகளை'- சீடகோடிகளாகப் பெற்றிருக்கும் நேரு பண்டிதரின் வார்த்தைகளிலே 'கண்ணியக்குறைவு' காணப்படுவது வியப்பிற் குரிய செய்தி அல்லதான்!

பம்பாயிலே எழுந்த 'புயலை' நினைவிலே வைத்துக் கொண்டு, உறை சிந்தும் போது, "எல்லைப் புற பிரதேசத்து மலைஜாதி யினரிடையே தலை சீவும் பழக்கம் இருந்து வந்தது; இப்பொழுது நடைபெறும் சில சம்பவங்களைப் பார்க்கும் போது, அந்தப் பழக்கம் எவ்வளவோ மேல் என்று நான் கருதுகிறேன்" என்று குறிப்பிட்டாராம் பண்டிதர்!

மலை ஜாதியினரை உவமைக்கு இழுக்கின்ற அளவிற்கு 'ஞானம்' பெற்ற இவருக்கு—இந்த சாதாரண விஷயங்கள் சிந்தனையில் படாமல் போனது ஏனோ தெரியவில்லை!

கச்சையை வரிந்துகட்டி, உலக நாடுகளுக்கெல்லாம் அமைதியைக் கற்றுக் கொடுக்கப் புறப்படும் இந்த அரசியல் விற்பனருக்கு, உள்நாட்டுப் பூசலையும், புகைச்சலையும் தவிர்க்க முடியாமல் போனது ஏன்?

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 17--2--56 வெள்ளி

ஏமாற்று வேலை!

பிராந்திய மொழிகளுக்குப் புதைகுழி தோண்டிவிட்டு, விதவையைப் போல வாழ்விழந்து காணப்படும் இந்திக்கு மணிமகுடம் தேடிக் கொடுக்கும் வேலை—இன்று முன்னிலும் அதிவேகமாக நடைபெறுவதையும், சத்தற்ற மொழியை அன்னைத் தமிழோடு சரியாசனம் ஏற்றினால் சாய்ந்து வீழும் பிணங்கள் எண்ணிலடங்கா—என எக்காளம் ஊதி, எக்காலமோ இந்தியின் இறுதிக் காலம்—என ஏங்கித் தவித்திடும் தோழர்களின் பெருமூச்சு பூகம்பமாய் எழுவதையும், நாடு இன்று பார்த்து வருகிறது.

செந் தமிழ்க்கே தீமை வந்தபின்னும் இந்தத் தேகமிருந்தொரு லாபமுண்டோ—என நம்மையெல்லாம் கர்ஜனை யெழுப்பச் செய்து காதலியர்க்குக் கடைசி முத்தத்தை ஈந்துவிட்டு போர்க் காதைப் பாடுவதற்குப் புலியென கிளம்புவதற்கு மூல காரணமாயிருந்த ஆச்சாரியார்கூட, இந்தியைப் பற்றித் தான் கொண்டிருந்த இழிதகைப் போக்கினை உணர்ந்து திருந்திடும் நிலைமைக்குக் கொணடுவரப் பட்டிருக்கிறார். பூவின் மதுவினை மொண்டுவரும் வண்டுபோல் தமிழின் அருமை தெரியாதவரெல்லாம் இந்தி வேண்டாம்; செத்த மொழி தேவையில்லை—என ரசிகமணிகளாய் மாறி, தமிழின் தொன்மைப் பாடப் புகுந்திருக்கும் இந்த வேளையில் கூட இந்திக்கு அர்ச்சனை புரியும் ஏகாதிபத்ய தாசர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்!

காவா நாவிற் கனகனும்-விசயனும் செப்பிய மொழிகளைச் சேரனுக்குணர்த்தி, அவன் சிங்கமாய் மாறி, மானம் காத்த மறவர் இனத்தில்கூட மானம் மறந்தவர்கள் தொகை பெருகியபடி தான் இருக்கிறது!

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராயும், காமராசரின் நகலும் நிழலாகவுமிருக்கும் கக்கன் அவர்கள், தமிழன்னையின் முகத்திலே தணல் கொட்டும் வேலையை அமிர்தசரஸ் மாநாட்டிலே அழகுறச் செய்து முடித்திருக்கிறார்.

மடிந்துபோன இந்தி விதைகளை தமிழ்த் தரணியில் தூவுவதற்கு மொழி வெறி பிடித்தோர் ஏராக இருக்க, கக்கன் அதற்குக் குனிந்து கொடுத்து சவுக்கடிகளைச் சுமந்து, ஏரிழுக்கும் எருதாகப் பயன்பட மேலும் அவர் தன் முதுகை வளைத்துக் காட்டியிருக்கிறார்!

இந்தி தென்னகத்தில் பரவுவதற்கு—ஒவ்வொரு தாலுக்காவின் தலை நகரிலும் ஒரு இந்திப் பிரச்சார சபை நிறுவப்பட வேண்டுமாம்!

—இந்தத் தீர்மானம் கக்கனால் முன் மொழியப்பட, கேரளத்தைச் சேர்ந்த குட்டியம்மாளு அம்மாவால் வழி மொழியப் பட்டிருக்கிறது!

கற்கண்டு இனித்தாலும், காகம் அழுகிய பிணத்தைக் கொத்துவதிலேயே சுவை காணும் சுவையை அடைவதைப் போல, சங்கம் வளர்த்த மொழியிருக்க சாக்கடை இந்தியிலேயே படுத்துப் புரளுகின்றனர், தேசீயத் திருவாளர்கள்!

ஆனால் ஆசிய ஜோதியோ இவர்களைவிட சாகசத்தில் சிறந்தவர்! கக்கன் போன்றோர் கண்மூடித் தாக்கும் காட்டெருமை என்றால், நேரு போன்ற சாணக்கிய வித்தை பயின்றவர்களை குள்ள நரிக்கும் மெள்ள மெள்ள நடந்து கள்ளத்தனம் புரியும் பூனைக்கும்தான் ஒப்பிட வேண்டும்.

அவர் பேசியிருக்கிறார்:

"இந்தத் தீர்மானம் முடிவு பெற வில்லை; தென்னிந்தியர் இந்தி கற்பதைப் போலவே வட இந்தியரும் கன்னடம், தமிழ், மலையாளம் அல்லது வேறு மொழியைக் கற்க வேண்டும்."

—கனல் சொரியும் கதிரவனின் கீழேயிருந்து, வியர்வை சிந்த உழைத்த எருதை தட்டிக் கொடுப்பதைப் போல பேசியிருக்கிறார் மோதிலால் மைந்தர்!

புத்திசாலிப் பையனொருவன் அடுத்த வீட்டுக் குழந்தையைப் பார்த்துச் சொன்னானாம்! நீ உங்கள் வீட்டிலிருந்து அவல் கொண்டு வா; நான் எங்கள் வீட்டிலிருந்து உமி கொண்டு வருகிறேன்; பிறகு இருவரும் ஊதி ஊதிச் சாப்பிடலாமென்று! அதைப் போலத்தான் சாதுரியமாகப் பேசியிருக்கிறார் சகலகலா பண்டிதர், தென்னகத்து மொழிகளில் சிலவற்றை விந்தியம் தாண்டி வாழ்வோர்—கற்க வேண்டுமென்று!

அவர் உமி கொண்டு வருவாராம்; நாம் அவல் கொண்டுவர வேண்டுமாம்—பண்டிதரின் பேச்சு இந்தப் பழைய கதையைத்தான் நினைவு படுத்துகிறது.

அவர் இங்கே கொண்டுவரும் இந்திக்கு தபால் தலையிலே, தந்தியிலே, ரயில்வே நிலையத்திலே, அரசாங்க அலுவலகங்களிலே இடமாம்—

ஆனால் வட இந்தியர்கள் மட்டும் தென்னிந்திய மொழிகளில் ஒன்றைக கற்றாலே போதுமாம்!

—இந்தப் பித்தலாட்டத்தை ஏதுமறியாத சிறுவர்களிடம் வேண்டுமானால் சொல்லி மகிழலாம். தமிழர்கள் என்ன பசலைகளா? புலியை எலியென்று நம்பும் ஏமாளிகளா?

மோதிலால் மைந்தரும், அவரைச் சுற்றிக் குழுமியிருக்கும் இந்தி வெறிக்காரர்களும் கக்கனை வைத்து தமிழகத்தைப் புள்ளி பார்த்து விடுவார்களேயானால் — இறுதியில் அவர்கள் எண்ணம் தோல்விப் பாறையில் மோதி சுக்கு நூறாகத்தான் போகுமென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

★

கொள்ளைக்காரர்கள்!

★

'ஜக்கா' பயங்கரக் கொள்ளைக்காரனாக, நெடுங்காலம் போலீஸ் புலிகளின் கண்களிலே பொடி தூவிவிட்டு உலவிக்கொண்டிருந்தானாம்! ஆனால், இன்றோ அந்த கொடுமைகளுக்கெல்லாம் தலைமுழுக்குப் போட்டுவிட்டு, காலத்துக்கேற்ற கருத்தைக் கவிதையாக்கி வீதிகளிலே பாடி வயிறு வளர்த்து வருகிறானாம்.

அண்மையில் அமிர்தசரசில்—பட்டியிலே திரளும் ஆடுகளென கூடியோர் நடத்திய கலா நிகழ்ச்சியொன்றில்; இந்த மாஜி கொள்ளைக்காரனுக்கும் இடம் கிடைத்ததாம்; அருமையான சில கவிதைகளைப்பாடி, சபையோரின் பாராட்டைப் பெற்றானாம், அந்த புதிய தெருப்பாடகன்:

கலா நிகழ்ச்சி முடிந்ததும், 'ஜக்கா' வைப்பார்த்து, 'பயங்கரக் கொள்ளைக் காரனாகவும், பழிபாவத்திற்கு அஞ்சாத கொலைகாரனாகவும், கேட்டாலே குலை நடுக்கம் கொள்ளும் கொடியவனாகவும், உலவிக்கொண்டிருந்த நீ இப்பொழுது ஏன் அந்தத் தொழிலைவிட்டு விட்டு விட்டாய்' என்றாராம், அமிர்தசரஸ் வீரர் ஒருவர்!

'நான்விட்டு விட்ட அதே தொழிலைத்தானே இன்று உம் போன்ற ராஜியவாதிகள் செய்து கொண்டிருக்கின்றனர்' என்று சுடச் சுட பதில் சொன்னானாம், அந்த துணிவு மிக்கவன்!

வாயடைத்துப் போன அங்கிருந்த தேபர்ஜி—வயிற்றிலே இருந்து சிரிப்பை வலிய வர வழைத்துக் கொண்டு, அந்த உள்ளதைச் சொன்னவனுக்கு ரூ. 20 ஐயும் பரிசாகத் தந்தாராம்!

தேவிகுளம், பீர்மேட்டை திருப்பிக்கொடு

முதல் பக்கம்!

சந்தர்ப்பம் ஒரு காற்றாடி : குப்பை மேட்டிலும்அறுந்து விழும், கோபுரத்துக் கலசத்திலேயும் தொத்திக் கொள்ளும் !

கண்ணம்மாவைப் பார்க்கும் போது, யாரோ செத்துப்போன ஒரு அனுபவக்காரன் சொல்லி விட்டுப்போன, இந்த வாசகங்கள் தான் என் நினைவிற்குவந்தன. மேனி குலையாத 'பிளைமவுத்' கப்பலிலே, மெருகு பூசிய சிலை போல, அதோ மிதந்து செல்லுகிறாளே அவள்தான் சிப்பாய் வீரண்ணனின் மகள் கண்ணம்மா என்றால், இப்பொழுது அவனேகூட நம்பி இருக்க மாட்டான்! ஆனால் அந்த சிக்கலுக்கே இடமில்லாமல், அந்த ஏழை சிப்பாய் தலையைக் கீழே போட்டு சில ஆண்டுகள் உருண்டு விட்டன ; இதெல்லாம் பழைய கதை.

★

'கமலம், கண்ணம்மாவைப் பத்திரமாகப் பார்த்துக் கொள் : என்று கண்களில் நீர் தளும்ப, கட்டிய மனைவியிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு—மூட்டை முடிச்சுகளோடு பூனாவிற்கு சென்ற வீரண்ணன், முதல் முறையாகத் திரும்பி வரும்போது, குழந்தை கண்ணம்மா, குமாரி கண்ணம்மாவாக மாறிஇருந்தாள். 'வயது வந்த பெண்ணை வீட்டிலே வைத்திருப்பது, நெருப்பை மடியிலே கட்டிக் கொண்டிருப்பதைப் போல' என்ற உலக அனுபவத்தை கமலம் அறியாதவள் அல்ல! என்றாலும், இரண்டாவது முறையாக வீரண்ணனின் முகாம் லாகூருக்கு மாற்றப்பட்ட போது, கமலத்திடம் இந்த வாசகங்களை நினைவு படுத்தி விட்டு அடுத்த முறை வரும்போது கண்ணம்மாவை, மீசை அரும்பிய ஒரு ஆண் பிள்ளையின் கையிலே பிடித்துக் கொடுத்து விட்டால்தான், 'பாரம்' குறையும்; என்று முடிவு செய்து கொண்டு லாகூருக்குப் புறப்பட்டான். அதற்குப் பிறகு வீரண்ணனைப் பற்றிய தகவலே கிடைக்கவில்லை, மாதத்திற்கு ஒரு முறை வந்து கொண்டிருந்த பணமும், கடிதமும் சேர்ந்தாற்போல இரண்டாண்டுகள் நின்று விட்டது என்றால் ..! கமலத்தின் சிந்தனையிலே கலக்கமும், கவலையும் குடியேறி விட்டது. பிறைநிலா போல இளமை பொங்கிக் கொண்டிருக்கும் கண்ணம்மாவையும், கணவன் போனதிசையிலே நிரந்தர அமைதி நிலவிவிட்டிருப்பதையும் நினைக்கும்போதெல்லாம் – கமலத்தின் இதயமே அறுந்து தரையிலே விழுந்து விட்டதைப்போல ஆகி விடும்! கமலம் காத்திருந்தாள் கணவன் சென்ற திசையிலே இருந்து சேதிவரும் என்று—வந்தது ஒரு செய்தி அவள் வயிற்றிலே எரி தணலை வாரிக் கொட்டுவதற்கு! சிப்பாய் வீரண்ணன், துப்பாக்கிக் குண்டுகளை மார்பிலே தாங்கி மடிந்து விட்டான் என்ற செய்தியை சுமந்து வந்த ஒரு கடிதம், கமலத்தை விதவைக் கோலத்திலே நிறுத்தி வேடிக்கை பார்த்தது!

செத்துப்போன வீரண்ணன் என்ன, கிண்டி 'ராஜா'வா பொன்னைக் குவித்து விட்டுப் போக! அவன் கமலத்திற்குத் தந்து விட்டுப் போன செல்வ மெல்லாம்—கண்ணம்மா! அந்த கோகினூர் வைரம் ஒன்றுதான், அவளுக்கு சொத்து, சுகம் எல்லாம் !

கமலத்தின் வாழ்விலே இருள் படிந்திருந்த இந்த நேரத்தில்தான் துயர மேகங்கள் அந்தத் திக்கற்றவளை சூழ்ந்து கொண்டிருந்த போதுதான், அவள் வயிற்றிலே உதித்த வயிர நிலவாம் கண்ணம்மா, கனக்க கொடியாக-கரம்படா ரோஜாவாக அந்த குடிசையிலே, நடமாடிக் கொண்டிருந்தாள்,

கண்ணம்மா, என்ன சீமான் தோட்டத்திலே செழித்த ரோஜாவா, எடுத்ததற்கெல்லாம் சேடியரைத் துணைதேட, கடைத்தெருவிற்கு சென்று; சில்லறைச் சாமான்கள் வாங்கி வருவதிலே இருந்து, எல்லா வீட்டு வேலையையும், அவள்தான் கவனித்துக் கொள்ள வேண்டும்.

★ பைத்தியக்காரி! கண்ணாடியிலே பாரடி உன் கட்டழகை! நீயோ அழகு தெய்வம்! நாட்டிலே உனக்கு பக்தர்கள் ஏராளம்! பிறகு ஏன் பயந்து சாகிறாய்?

உள்ளநோய், உடல் நோயக மாறி நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டிருந்த கமலம், கண்ணம்மாவின் பொங்கும் இளமைக்கு, அடிக்கடி வேலி போட்டுக் கொண்டிருந்தாள்.

★

பருவம் தந்த பேரழிலை சுமந்து கொண்டு கண்ணம்மா கடைவீதிக்கு சென்றால்—அந்த வட்டாரத்து காளை யாருக்கு சித்தத்திலே ஒரு கிறு கிறுப்பு ஏற்படும்! குடைந்தெடுத்த ஓவியம் போல குண்டு முகம்! காதளவு நீண்டு இருக்கும் கெண்டை விழி! அப்பப்பா, அந்த ஏழைக் குமரிக்கு, எங்கிருந்துதான் கிடைத்ததோ இத்தனை எழில்! தங்க மெடுத்து தணலில் அடித்து வைத்த சிலை, என்பார்களே கவிஞர்கள், அந்த ரகத்தைச்சேர்ந்தவளல்ல அவள்!

கண்ணம்மா கருப்பு நிறம்! யாராவது 'கருப்பாயி' என்று அவளைக் கேலி செய்யும்போது: ''மூடடி வாயை, உலக அழகியாம் கிளியோ பாட்ராவே, அட்டைக் கரிதானும், என்னைக் குறை சொல்ல வந்து விட்டாள்!'' என்று பதில் கூற அவளென்ன ஷேக்ஸ்பியர் படித்தவளா? 'கருப்பே தனி யழகு—காந்தலே தனி ருசி', என்று கிராமத்து பாணியிலே தன் கருப்புநிறத்திற்கு ஒரு சிறப்புப் பாயிரத்தைத் தூக்கிப் போடுவாள்!

காலத்தின் அழுத்தத்தால்—கட்டழகு திரண்டு வரும் கண்ணம்மாவை, இனியும் வீட்டிலே வைத்துக் கொண்டிருப்பது ஆபத்து என்று நினைத்த கமலம் ; தனக்கு தூரத்து உறவைச் சேர்ந்த ஒரு வாலிபனிடம் கண்ணம்மாவின பூக்கரங்களைப் பிடித்துக்கொடுத்த சில மாதங்களில், கமலமும் கண்ணை மூடி விட்டாள்.

கட்டிப் பிடித்து, அவள் கருப்பு திராட்சை போன்ற கன்னங்களில் ஆயிரம் முத்தம் பதித்து விடலாமா, என்று துடித்துக் கிடந்த வாலிபர் கூட்டம், கண்ணமாவிற்கு கிடைத்த 'ஜோடி'யைப் பார்த்து—கண்ணீர் வடிக்காத குறைதான் ; அவ்வளவு கவலை! அழகு ரோஜாவை, அகோர சொருபனுக்கு கமலம் தத்தம் செய்து விட்டாளே என்று அக்கம் பக்கத்திலே இருந்தவர்கள்; முணுமுணுத்தார்கள்.

மணமான சில மாதங்கள், கண்ணம்மாவின் கணவன், அவள் கேட்டதை யெல்லாம் வாங்கித் தருவான் ; முகம் கோணாமல் நடந்து கொள்வான்; மாதத்திற்கொரு முறையாவது, சினிமா, நாடகம், முதலிய இடங்களுக்கு அழைத்துச் செல்வான் ; வேலை வெட்டி கிடையாது, வேளை தவறாமல் உணவும், விதவிதமான சேலைகளும் எப்படி வாங்கித் தருகிறான் ? என்பதெல்லாம் ஒன்றுமே விளங்காத புதிராக இருந்தது ; ஊராருக்கு மட்டுமல்ல ; கண்ணம்மாளுக்குக்கூடத்தான் !

★

காலம் உருண்டு கொண்டிருந்தது : ஊர் வாயை எத்தனை நாளைக்கு மூடிவைக்க முடியும்? ஆமாம்! ஏதோ கசப்பான சில செய்திகள் கண்ணம்மாவின் காதுகளுக்கு எட்டின ; ஆனால் நேரில் வந்து சொல்வதற்கு ஊராருக்கு அச்சம் ; பழைய மிடுக்கு ; சிப்பாய் வீரண்ணனின் மகள் என்ற ஒரே பயம்! எனவேதான் ; ஜாடைமாடையாப் பேசிக் கொண்டனர் :

கண்ணம்மாளுக்கு விஷயம் புரிய அதிகநாள் பிடிக்கவில்லை.

''ஆயிரம் முறை உங்கள் காலிலே விழுந்து கும்பிடுகிறேன்: வேண்டாம் இந்த அநியாயம்! நாலு வீடு பிச்சை எடுத்தாவது உங்களைக் காப்பாற்றுவேன்; சத்தியம் செய்து கொடுங்கள்! இனிமேல் தவறான வழியில் நடப்பதில்லை! என்று''-இப்படி கெஞ்சினாள்; கண்ணீரைக் காட்டினாள்; அவன் கட்டிய தாலியைநினைவு படுத்தி அதற்கு ஆபத்து வராமல் நடந்து கொள்ளுங்கள் என்றுமன்றாடினாள்!

ஏ. கே. வில்வம்

அந்த நேரத்திற்கு ஏதோ சமாதானம் கூறிவிட்டு, வெளியேறி விட்டான்; அதற்குப் பிறகெல்லாம், இரவு நேரங்களில் வெளியே தங்க ஆரம்பித்தான். தொடர்ந்து சில நாட்கள் வராமலும் இருப்பான். கண்ணம்மாவின் நிலையோ கவலைக்குரியதாக மாறி வந்தது; கமலத்தின் அணைப்பிலே செல்லக் கிளியாக வாழ்ந்து வந்த கண்ணம்மா, அன்றுதான் தன் வாழ்க்கையை நினைத்து முதல் முறையாக கண்ணீர் விட்டாள்.

★

ஒருநாள் இரவு! அவசரஅவசரமாக கதவைத் தட்டினான் ரத்தினம். ஆம்! அவள் கணவன்தான். கிழிந்த பாயிலே சுருண்டுகிடந்த கண்ணம்மா, அவசரமாக எழுந்து கதவைத் திறந்தாள்!

முகமெல்லாம் வியர்த்து, மேல் மூச்சு வாங்கியபடி குடிசையிலே வந்துவிழுந்தான் ரத்தினம்! திறந்த கதவை மூடிவிட்டு, மிரண்ட விழிகளோடு மூலையிலே நின்றுகொண்டிருந்த ரத்தினத்தைப் பார்த்து, 'இதெல்லாம் உங்களுக்கே நியாயமாக இருக்கிறதா-இரும்புபோல கைகால்களை வைத்துக் கொண்டு, ஏன் இந்த வெட்கக் கேடான செயலிலே இறங்கிவிட்டீர்கள். இதோ பாருங்கள், இன்றுதான் கடைசி நாள்; இன்னொருமுறை நீங்கள் இப்படி நடந்துகொண்டால் நான் எங்காவது குளம்—குட்டை...;என்று சொல்லும்பொழுது துக்கம் அவள் தொண்டையை நெறுக்கிப் பிடித்தது! 'ஓ'வென்று வாய்விட்டு அழுதாள் கண்ணம்மா, என்ன இருந்தாலும் ரத்தினமும் மனிதன்தானே! கண்ணம்மாவை அன்போடு தன் மார்பிலே அணைத்து, அவள் சுருண்ட கருங் கூந்தலை, தன் முரட்டுக் கரங்களால் கோதிவிட்டான். ''கண்ணம்மா கடவுள் சத்தியமா சொல்றேன், இனிமே இந்த வழியிலே போகமாட்டேன், என்னை நம்பு'' என்று கூறும்போது அவன் இதயம் 'பட பட'வென்று அடித்துக் கொண்டதும் 'அவன் மார்பிலே முகம் புதைத்திருந்த கண்ணம்மாவிற்கு தெளிவாகக் கேட்டது அன்றிரவு அந்த ஜோடிகளுக்கு இன்ப இராவாக தோற்றமளித்தது! தன் கணவன் நல்லவனாக – நாணயமுடையவனுமாக மாறிவிடப் போகிறான்—என்ற திருப்தி–அவளுக்கு!

★

வயிற்றுப் புயலுக்கு வழி சொல்ல வேறு மார்க்கம் தேடியாக வேண்டுமே; படித்தவனெல்லாம்—மெரினா கடற்கரையிலே பட்டாணி, சுண்டலுக்கு'பாசுரம் பாடிக் கொண்டிருக்கும்போது எந்த வேலை காத்திருக்கிறது.

★ தொடர்ச்சி 9-ம் பக்கம்



★ இதுதான் ஜாலியன்வாலாபாக்கிலுள்ள மண்டபம்! இதற்குப் பக்கத்திலேதான் டயர் சகோதரர்கள் இரத்த ஆற்றிலே 'ஜலக்ரீடை' செய்தார்கள். கருப்புச் சதுரங்கள் தோட்டா பாய்ந்த இடங்களைக் குறிக்கின்றன.

வேகுதே; உயிர் போகுதே! —என்று தணலில் புழுவாகத் துடித்தார்கள்!

'ஓ'வென்று அலறினர்; ஒரு நொடி பொறுப்பீர்; உயிர் பிழைத்தோடுகிறோம் — எனப் புலம்பி அழுதார்கள்!

கற்கண்டு சொல்லழகி; என் சொற்கண்டு சுகம் பெறும் குமுத விழியாள் — கூந்தலில் பூவின்றி தரையில் கொட்டிய பாலாகி விடுவாளே—என்று நைந்து போனார்கள் !

அப்பாவென்று ஓடி, அடிமடி தடவி, அன்பு முத்தம் பெய்து,

—சித்தத்திலே நெருப்பு வைப்பதைப் போன்ற சித்திரத்தை மனக்கண் முன் உருவாக்கும் இந்த நிகழ்ச்சி நடந்து பல ஆண்டுகள் முடிந்து விட்டன.

அன்று ஏதுமறியாப் பொது மக்களைப் புன்மைத் தேரைகளாக நினைத்து புன்னகை புரிந்த சீமான்கள், இன்று ஓடி விட்டார்கள், பிறந்து வளர்ந்த பூமிக்கு !

ஆமாம் ; ஜாலியன் வாலாபாக் தோட்டத்திலே அன்று இரத்தத் தடாகத்திலே ஜலக்ரீடை செய்து மகிழ்ந்த டயர் சகோதரர்களின் சொந்தக்காரர்கள் இன்று கடல் தாண்டிப் போய் விட்டார்கள் !

—குருதி மணம் நாறும் அந்த நாள் மறைந்து விட்டது : அன்று நாடாண்டவர்களும் கடையைக் கட்டி விட்டு நடையை முடுக்கி விட்டார்கள் !

பிணம் நாற்றம் கமழ்ந்த ஜாலியன் வாலாபாக் பூங்காவிலே அன்று ஏகாதிபத்திய வேங்கைகளுக்கு உணவாக வீழ்ந்தவர்களின் சார்பாக 'நினைவுச் சின்னம்' ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது, இன்று!

சுதந்திரம் பெற்று விட்டோம் என்று சங்கநாதம் எழுப்புவோர் அங்கே ஒரு கணம் நின்று, சோகக் கண்ணீர் வடிக்கின்றனர்.

தயாகத்திற்காக நீங்கள் ஒடித்துக் கொடுத்த எலும்புத் துண்டுகளிலே இன்று தாயின் மணிக்கொடி தழைத்துப் பறந்திடுவதைப் பாரீர் — என்று 'பிரார்த்தனை' புரிகிறார்கள் !

அமிர்தசரஸ் நகரிலே ஆட்டு மந்தைகளைப்போல் கூடியோர் அங்கு வந்து, தியாகச் செடி வளர்ந்து மரமாவதற்கு வார்க்கப்பட்ட செந்நீரின் வலிமையை

போலவுமல்லவா இவர்கள் நடித்துக் காட்டுகிறார்கள் !

நம் கழகம் பிள்ளைப் பிராயத்திலிருந்தபோதே குன்றத்தூர் என்னும் குக்கிராமத்திலே, ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து, பதினாறு ரவுண்டுகள் அல்லவா துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி யிருக்கிறார்கள் இவர்கள் !

கல்லக்குடி என்னும் சிற்றூரிலே அறுபத்தி நான்கு ரவுண்டு தோட்டாக்கள் அல்லவா நம்மை நோக்கிப் பாய்ந்து வந்திக்கின்றன ! தூத்துக்குடி நகரிலே டயரை மிஞ்சினார்களே, இந்தத் தேசிய வீரர்கள் !

ஆண் குறியை இழந்தவர்கள் ; மண்டை ஓடு சிதறப் பெற்றவர்கள் ; குடல் சரிந்து விழுந்தவர்கள் —இப்படியல்லவா பட்டியல் பெருகியிருக்கிறது, இந்த நாட்டிலே !

—விடுதலை வீரர்கள் மீது அக்கினித் திராவகத்தைப் பொழிந்து விட்டு ஜாலியன் வாலாபாக்கிலே மாண்டுபோனோருக்கு நினைவுச் சின்னம் நிறுவு

'டயரை'ப் பழிக்கும் 'கதர்'!

வேம்பென்று உரைத்தனரே வாழ்வை; அவர்கள் நரம்பில்லாப் பிராணிகளா? என்று கேள்வியெழுப்பத் தோன்றும் தந்தையரெல்லாம் அன்று தவியாய்த் தவித்தனர் ; தரையில் புரண்டனர் ; கரை தெரியாக் கடலாயிற்றே எங்கள் குடும்பப் பற்று ; அதை மீண்டும் காணாமல் போகின்றேனே. எனக் கண்ணீர் விட்டனர் ! பிழைக்க வழி தேடி, கிடைத்த சந்துகளிலெல்லாம் புகுந்து ஓடினர் !

குதிரையின் குளம்படிகள் கிளப்பிய தூசிப் புகையால் கண் அடை பட்டோர் அருகேயிருந்த பாழும் கிணற்றிலே இடறி விழுந்து, பிடரியிலே பார்வை பெற்று பிள்ளை மனம் கொண்டவரைத் துரத்தியடிக்கும் துன்மார்ககர்களுக்குத் தங்கள் தூய உயிரைத் தானம் செய்தனர்,

அவர்களுக்குச் சிறகு மட்டுமிருந்தால் வானத்திலே பறந்திருப்பார்கள் ; வைகுண்டமோ, கைலாயமோ சென்று தங்களுக்கு நேர்ந்த கதியை விளக்கி வாமோசனம் தேடியிருப்பார்கள்! பாவம்; அவர்களால் முடியவில்லை ; வாழ்நாளுக்கு முடிவைத் தேடிக் கொண்டனர் !

அன்று தோட்டா மழையைப் பொழிந்து, மனித குலத்தை வேட்டையாடிக் குவித்தனர். சுட்டார்கள் ! ஒரு முறையா ; இரு முறையா? ஒருவரையா ? இருவரையா? ஒரு நொடியா? இரு நொடியா ?

நினைக்கவே நெஞ்சம் கொதிக்கிறதே !

பத்து நிமிஷங்களல்லவா அவர்கள் தொடர்ந்தாற்போல் துப்பாக்கிச் சனியனை முடுக்கி விட்டிருக்கிறார்கள் !

ஆயிரத்து அறு நூற்றி ஐம்பது ரவுணடுகளல்லவா; ஆதிக்கவெறியர்களின் குண்டுகள் ஆள் தேடிப் பறந்திருக்கின்றன !

கரடி வாயில் புகுந்த ஈசற் கூட்டத்தைப் போலல்லவா வாழப் பிறந்தவர்களை வாயில் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் !

இடிபட்ட சுவர்போல அல்லவா மக்கள் கூட்டம் மடமட வென சாய்ந்திருக்கிறது !

—காட்டுப் பன்றிகள் கத்துவதைப் போல் அல்லவா அந்த ஏகாதிபத்தியக் காவலர்கள் இதைப் பார்த்து எள்ளி நகையாடி யிருக்கிறார்கள் !

உணர்ந்து, உள்ளம் தெளிந்து திரும்புகின்றனராம் !

டயர் சகோதரர்களும், அவர்கள் ஆணையின் கீழிருந்து மனித நெஞ்சங்களைக் கிழித்தெறிந்த சிப்பாய்களும் அனுப்பிய தோட்டாக்கள் அங்கேயிருந்த மண்டபமொன்றைக் காயப்படுத்திச் சென்றிருக்கின்றனவாம்!

அந்த இடங்களையெல்லாம் கண்ணாடியால் அலங்கரித்து காட்சிசாலை அமைத்திருக்கின்றனர், இன்றைய ஆளவந்தார் !

ஏதோ இவர்கள் துப்பாக்கியைத் தொடுவதில்லைபோலவும், டயர் சகோதரர்கள் மட்டும் காட்டுமிராண்டி தர்பார் நடத்தி விட்டது

கிறார்களாம் ; பிரார்த்தனைகள் புரிகிறார்களாம், பித்து மனம் படைத்த ஏகாதிபத்யப் புல்லர்கள் !

இவர்களுக்கு என்ன தகுதியிருக்கிறது டயர் துரையைப் பழித்து பஞ்சாபிலே அவர் செய்த அக்ரமத்தை நினைவுறுத்தி காட்சி மண்டபம் காட்டுவதற்கு?

மண்டை ஓடுகளைக் கொண்டு கூரைவேய்ந்து, அதிலிருந்து செங்கோல் பிடிப்பவர் எந்த முகத்தை வைத்துக்கொண்டு வெள்ளையனைக் கொள்ளையன் என்று கடிந்துரைக்க முடியும் ?

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

★ அந்த அக்ரமத்தைப் பழிக்கும் இந்த ஆளவந்தார்கள்தான் கல்லக்குடியிலே 'சுடு'-என்று உத்தரவிடுகிறார்கள் !

காமராசர் அறிக்கை ஒரு கண் துடைப்பு!

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

கங்கைக்கரை வாழ் காவலர்கள் காவிரிக் கரைக்கு அறைகூவல் விடுக்கிறார்கள் என்றால் விந்தையினும் விந்தையன்றோ! துப்பி வாடி — தோரணங்கற்பட்டு — வேட்ட மங்கலம் கோட்டையிலுள்ள வீரரெல்லாம் வரட்டுமென்றான் செங்குட்டுவன்! வந்தனர்; வெற்றி தந்தனர்!

இதோ, தமிழரசு—தி. மு. க.—கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டுகள் — கோட்டைகளிலுள்ள வீரரெல்லாம் கிளம்பிவிட்டனர்! தில்லியின் தீர்ப்பை எதிர்த்து தழல் பறக்கும் நோக்குடனே—புயல் வேகம் புது வேகம் கொண்டுவிட்டனர்!

தேவிகுளம், பீர்மேடு திருத்தணி சித்தூர்—தாய்த் தமிழகத்தின் பகுதிகளை மூளிப்படுத்தும் முறையற்ற செயலை முறியடிக்க—என்றைக்கும் கப்பம் கட்டும் நிலையிலே - கால் பிடிக்கும் வேலையிலே—தென்னகம் இருக்கவேண்டும்; அதற்குத் தட்சிணப் பிரதேசமே தேவையென்றுகூறிடும் ஆதிக்க வெறியைச் சாடிட—மெழிவழியில் முழுத்தமிழகம் தந்திடு என்ற பரணி பாடிட—முரசு முழங்கி விட்டது! கொடி உயர்ந்து விட்டது!

தாய்த் தமிழகத்தோடு இணைய வேண்டிய பகுதிகளைத் திருப்பிக் கேட்டும், தட்சிணப் பிரதேசமெனும் 'மாய் மாலம்' தேவையில்லையென்று வலியுறுத்தியும்—தில்லி மூலவர்களுக்குக் கண்டனத்தைத் தெரிவிக்க ஆரம்பமாகும் போராட்டத்தின் முதற் கட்டம் பொது வேலை நிறுத்தம்!

பிப்ரவரி இருபது! இருப்பது இடையே இன்னும் சில மணித்துளிகள்! தமிழரின் ஏகோபித்த கண்டனக் குரல் காமராசரின் மூடிய காது வழியே நுழைந்து, திறவாத உதடுகளைத் திறக்க வைத்து, தில்லியின்பால் பேசவைக்க உதவட்டும் என்ற நல்நினைப்போடு நடைபெற இருக்கும் அமைதி வழிக் கிளர்ச்சி அது! தமிழர் உடமைப் போருக்கு தாயகம் தயாராகிவிட்டது! சர்வ கட்சித் தமிழர்களும் அணிவகுத்துவிட்டார்கள்! உதிர்ந்துபோன ஒன்றிரண்டுகளைத் தவிர மற்ற எல்லா மலர்களும் நிறைந்த மணமிக்க மாலை தயாராகி விட்டது! எல்லாக் கட்சித் தலைவர்களும் சூறாவளி வேகத்திலே சுற்றுப் பயணம் நடத்தி பொதுவேலை நிறுத்தம் அமைதி வழியில் வெற்றிகரமாக நடைபெற வழி வகுத்து வருகின்றனர். நமது பொதுச் செயலாளரின் சுற்றுப் பயணம் நடைபெறுகிறது. செல்லுமிடமெங்கும் அவர் செயலாற்றும் விதம் பற்றிக் கூறி வருகிறார். அவர் பின்னே கங்காணிகளின் பிரச்சாரமும் மறைமுகமாக நடைபெற்று வருகிறதாம். பாவம்; புலி வேட்டைக்குப் புறப்பட்டிருக்கும் நம்மிடையேகூட பூனை வேட்டையாடும் புன்மதியாளர் இருக்கத்தான் செய்கிறார்கள். என்ன செய்வது; அவர்களும் "தமிழர்—நாமவர்" என்று கூறிக் கொள்கிறார்களே—போகட்டும் பாவம்; பிழைப்புக்கு வழி தேடிக் கொள்ளட்டும்!

கடைகளை அடைத்து அமைதி வழியிலே பிப்ரவரி இருபதை நடத்திக் காட்டுங்கள்—எனப் பொதுச் செயலாளர் கூறிக் கொண்டே போக-அவர் பின்னாலே:

"பிப்ரவரி 20-ல் கடை அடைக்காதீர்! ஹர்த்தாலில் கலந்து கொள்ளாதீர்! சுதந்தர விரோதிகளின் பேச்சைக் கேட்காதீர்!" என்று அறிக்கைகளைப் பறக்கவிடும் கங்காணிகளையும், அந்த அமைதி குலைக்கும் அறிக்கைகளுக்கு முதலிடம் தரும் தேசிய ஏடுகளையும் நாம் கண்டு பரிதாபப் படுகிறோம். தமிழக முழுவதும் பொதுவேலை நிறுத்தம் அமைதியாக நடைபெற வேண்டுமென்று நாம் கருதுகிறோம். ஏனெனில் பிரச்சினை அனைவருக்கும் பொதுவான பிரச்சினை!

'தேவிகுளம் பீர்மேட்டை விடமாட்டேன்' என்று ஒரு திங்களுக்கு முன்தான் காமராசர் கர்ச்சித்திருக்கிறார். அதனால் இந்தப் பிரச்சனையில் காங்கிரஸ் தோழர்களும் ஈடுபடலாம்!

"சர்வகட்சிகளும் சேர்ந்து போர் தொடுக்க வேண்டும்—டில்லியின்முடிவு அநியாயமானது!"—இப்படி விடுதலை எழுதி இன்னும் 'மை' கூடக் காயவில்லை! அதனால் திராவிடக் கழகத் தோழர்களுக்கும் பிரச்சினையிலே பெரும் பங்கு இருக்கிறது!

மற்ற எல்லாக் கட்சிகளும்-கட்சி சார்ந்த கலையுலகத் தோழர்களும், கட்சிப் பற்றில்லா கலைஞர்களும், அனைவருமே பொதுவேலை நிறுத்தத்திற்கான ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த சமயத்தில் "கடையைத் திறந்து வையுங்கள்!" என்பது எதைக் குறிக்கிறது-" அரசாங்கத்தாரே! நீங்களும் உங்கள் துப்பாக்கிகளைத் துடைத்து வையுங்கள்!" என்பது போலல்லவா ஜாடை காட்டப்படுகிறது! வேண்டாம் இந்த விபரீத ஜாடை! தமிழர்கள் மிகவும் நொந்து போயிருக்கிறார்கள்! அவர்களது தரணிசின்னாபின்னமாக்கப்பட்டிருக்கிறது! வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல விபரீத அறிக்கைகளை விடாதீர்கள்—விபீஷணப் பட்டியலிலே உங்களை நீங்களாகவே சேர்த்துக் கொள்ளாதீர்கள்!

தட்சிணப் பிரதேசம் இப்போது இல்லை; பிறகு ஆலோசிக்கப்படும் என்கின்ற காமராசரின் கண் துடைப்பு அறிக்கையிலே கூட, பொது மக்கள் அபிப்பிராயத்திற்கு அதை விடப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்த அபிப்பிராயத்தை — தட்சிணப் பிரதேசம் வேண்டாமென்ற அபிப்பிராயத்தை வெளியிட காங்கிரசார் உட்பட அனைவரும் 'ஹர்த்தால்' நடத்துங்கள்!

பிப்ரவரி இருபது! தமிழகம் பகலிலே கூட நடுநிசி போன்ற அமைதியைக் காட்ட வேண்டும்! காலந் தவறி இரவிலே வந்துவிட்டோமோ என்று கதிரவன் வியப்படைய வேண்டும்!... கலப்பை தூக்கியோ, கருக்கறுவாள் தூக்கியோ, கழனிக்குச் செல்லும் உழவர்களைக் கண்டால்தானே, கதிரவனுக்குக் காலை மலர்ந்துவிட்ட செய்தி தெரியும்! தன் கால அட்டவணையையும் ஒத்திட்டுப் பார்த்துக் கொள்ள முடியும்! மிகைப்படுத்தி சொல்வது போல இருக்கலாம் தோழர்களே; பிரச்சினையின் அவசியத்

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

'அவர்தான் பாக்கி!'



நேருவின் அந்தரங்க நண்பர்—இந்தியாவின் பறக்கும் தட்டு—கிருஷ்ண மேனனுக்கு மந்திரி பதவி கிடைத்து விட்டது. மோதிலால் மைந்தரின் பிரியத்துக் குரியவர்களில் இன்னும் ஒருவர்தான் மீதமிருக்கிறார். மந்திரி நாற்காலியில் அமர்வதற்கு! அவர்தான் டெல்லி பார்லிமெண்டுக்கு வெளியே காத்துக் கொண்டிருக்கும் விஜயலட்சுமி யென்று, பிரபல கேலிச் சித்திரக்காரர் சங்கர் குறிப்பிடுகிறார்.

அந்த 5-மணி நேரம்!

நரை விழுந்து, நாடி தளர்ந்து, சுடுகாட்டுக்குப் போகும் நாட்களைக் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கும் அறுபத்தொன்று வயதுக் கிழவனின் முன்னே, ஒரு வாலிபனும் வனப்பு மிகுந்த நங்கையும் கைகோர்த்துக் கொண்டு சென்ருல் அவன் உள்ளத்தில் வாழ்க்கையைப் பற்றிய எரிச்சல் எப்படிப் புகைவிட்டுக் கிளம்புமோ,

அப்படித்தான் இருந்தது அறுபத்தி ஒராவது மாநாட்டைக் கூட்டியிருக்கும் காங்கிரசாருக்கு, அமிர்தசரசிலே அகாலி தளத்தைச் சேர்ந்தவர்கள் ஆணும் பெண்ணுமாய் ஊர்வலம் சென்றபோது!

சீக்கியர் தலைவர் தாராசிங்கின் ஆணையைத் தலைமேற் கொண்டு தள்ளாத வயதுக் கிழவரும் ஒரு கையில் தடியூன்றி, மறு கையில் உருவிய வாள்கொண்டு அணிவகுப்பில் கலந்து கொண்டனர்!

லட்சத்துக்கும் மேற்பட்டவர்களாம்! "ஆண்; பெண்; இளைஞர்; கிழவர்;"—இப்படிப் பல திறப்பட்டவரும் கலந்து கொண்டதாக 'இந்து' இதழ் எழுதுகிறது!

கிடைத்த வாகனங்களிலெல்லாம் ஏறிக் கொண்டு, ரயில், பஸ், மாட்டு வண்டி, 'நடை' வண்டி.—இப்படிப் பல சாதனங்களையும் பயன்படுத்திய வண்ணம் அன்று அவர்கள் அமிர்தசரஸ் நகரிலே கூடியிருக்கின்றனர்!

நம்முடைய மாநில மாநாடுகளிலேகடல்தாண்டிய இலங்கை, பர்மா, மலேயாவிலிருந்தும் பிரதிநிதிகள் வருவது போலவே அன்றைய ஊர்வலத்திலும் பீகார், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களி லிருந்தும் அகாலி தளத்தவர் பங்கெடுத்துக் கொண்டனர்!

சென்ற ஜூலை 5-ந் தேதியன்று ஆயிரக்கணக்கில் அறப்போர் வீரர்களை அனுப்பி, பஞ்சாபின் சிறைச்சாலையை யெல்லாம் பொங்கி வழியச் செய்த தலைவர் தாராசிங்தான் அன்றைய தினம் நடைபெற்ற அவர்கள் மாநாட்டிற்கும் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்திருக்கிருர்!

வீரம் தெறிக்கும்முகம்! விடுதலைக் கனல் பறக்கும் கண்கள்!—கையிலோ பளபளக்கும் பட்டாக் கத்தி!

—அவர்கள் கடந்துசெல்வதோ அகிம்சா தர்மம் பேசும் காந்தீயச் சீடர்கள் கூடியிருக்கும் பந்தல்!

—லட்சத்துக்கும் மேற்பட்ட அந்த லட்சிய வீரர்கள் 'அமிர்தசரஸ் ஆவடி மாநாட்டு' வாயிலைக் கடந்து செல்வதற்கு மட்டும் சுமார் ஐந்து மணி நேரத்துக்கு மேல் பிடித்ததாம்!

ஐந்து மணி நேரம்வரை உருவிய வாளும், உருக்குத் தோளும் கொண்டோரது அணிவகுப்பு செங்கோலை வளைத்து விளையாடுகின்ற ஆளவந்தாரின் மாநாட்டுப் பந்தலின் வழியே சென்றிருக்கின்றது!

—அந்த ஐந்து மணி நேரம் அமிர்தசரசிலே கூடியிருந்த காந்தி சீடர்களின் மனதிலேஎன்னென்ன உணர்ச்சி அலைகளை எழுப்பியிருக்கும்?

கூர் மழுங்காக் கத்திமுனையைப் பார்த்ததும் அவர்கள் சித்தத்தில் என்னென்ன சிந்தனைகள் உருவாகியிருக்கும்?

'குவோ வாடிஸ்' என்னும் ஆங்கிலப் படத்திலே ஒரு காட்சியொன்று வருகிறது. கவிதை புனைவதற்காக ரோம் நகருக்குத் தீவைத்த நீரோ மன்னனை எதிர்த்து நாட்டிலே கொந்தளிப்பு உருவாகிறது. ஆர்ப்பாட்டக்காரர்கள் அரண்மனையைச்சுற்றிவளைத்து விட்டார்கள். இன்னும் கொஞ்சம் நேரத்தில் நீரோவின் தலையையும் பதம் பார்த்து விடுவார்கள்.

—இந்த நிலையிலே மாமிச பர்வதம் போல் மக்களின் மனோ நிலையை உணராமல் வளர்ந்த நீரோ மன்னன் என்ன செய்வதென்று புரியாது விழிக்கிருன்.

எதிர்ப்பாளர்கள் கையில் சிக்கித் தவிக்காமல் தற்கொலை செய்துகொள்ள அவனுக்கு ஆசைதான்!

மனம் வைத்திருந்தால் தாராசிங் அமிர்தசரஸ் மாநாட்டை 'மதுரை'யாக்கியிருக்க முடியும்!

—அது எப்படிமுடியும் அவனால்?

சாம்ராஜ்யங்களுக்கு பூபதி: சரசவல்லிகளின் அதிபதி—அவனுக்குச் சாவதற்கு மனம் வருமா?

தற்கொலை செய்து கொள்வதற்குக் கூட துணிவு வேண்டுமே!

பெண்டிர் பலர் புடைசூழ திண்டிலே சாய்ந்திருந்த அந்தச் சோம்பேறி செய்வதறியாது தவிக்கிருன்—

அப்போது பணிப் பெண்—ஒரு காலத்தில் அவனுடைய படுக்கையறைப் பெண்ணாக இருந்தவள் தான்!—அங்கே வருகிருள்!

நீரோவின் கையிலே கட்டாறியொன்றைக் கொடுத்து, தற்கொலை செய்துகொள்ளத் தூண்டுகிருள்.

அந்தக் கோழை தடுமாறுகிருன்!

மார்பளவு கட்டாறியைக் கொண்டுசென்று பிறகு அதை உள்நோக்கிப் பாய்ச்சுவதற்குத் தயங்குகிருன்.

இன்னும் சிறிதுநேரம் உயிரிருந்தால் ஆர்ப்பாட்டக்காரர் கையிலே அவன் சிக்கிச் சின்னபின்னமாகி விடுவான். இந்த நிலையைத் தாங்க மாட்டாத பணிப்பெண்—அவனுடைய மாஜிக் காதலி—தானே சென்று அந்தக் கட்டாறியை அழுத்துகிருள்! அவன் மார்பில்.

அப்பாவிக் கிருஸ்தவ மக்களை உயிரோடு பிடித்துவந்து சிங்கத்திற்கும், புலிக்கும் பலிகொடுத்த நீரோ கட்டாறியைத் தன் மார்பை நோக்கிப் பிடித்துக் கொண்டிருக்க:

அதை பணிப் பெண்ணுள் அழுத்துகிருள், தன் கையால்!

கொலையும்—தற்கொலையும், இரட்டைக் குழந்தைகளாகின்றன, அந்த நேரம்!

—இந்தக் காட்சிதான் நினைவுக்கு வருகிறது, அமிர்தசரஸ் நிகழ்ச்சிகளைப்படிக்கும்போது!

நீரோவின் நிலையிலே, அவனை விட அதிகஅளவு அக்ரமங்கள் புரிந்த காங்கிரஸ்!

பணிப்பெண் நிலையிலே, உண்மை நிலை உணர்ந்து, காங்கிரஸ் இந்த நாட்டிற்கு நல்லது செய்துவிடவில்லை—என்று நினைக்கும் உண்மைக் கண்ணியவான்கள்!

அரண்மனைக்கு வெளியே ஆர்த்தெழுந்த ஆர்ப்பாட்டக்காரர்களைப் போல, போர்ப் பாட்டுப் பாடி: பாடி வீடு தேடி நடந்த சீக்கிய பூமியின் சிங்கக் குட்டிகள்!

நல்ல வேளை—இந்த உருவகம் அமிர்தசரசில் நடைபெறவில்லை!

—ஆனுல் இது நடந்திருக்கும்; இரத்தக் களரி ஏற்பட்டிருக்கும் தாராசிங்கின் தாடி முனைமட்டும் கண்ஜாடை காட்டுவதைப்போல சிறிது அந்தப் பக்கம் அசைந்திருக்குமேயானுல்!

அவர் குரல் கொடுத்திருந்தால் குருதிவெள்ளம் பாய்ந்திருக்கும்: "அன்று தமிழகத்திலே காந்திக் குல்லாய் அணிந்து கொண்டு கருஞ்சட்டைக் காரர்களின் பந்தலைக் கொளுத்தி, பாவையரைப் பகிரங்கமாக அவமானப் படுத்தினீர்களே; இன்று பாரீர், அவர்கள் சார்பாக நான் பழிக்குப் பழி வாங்குகிறேன்"—என்று, அந்த இரணகளத்திலே அவர் கண்ணசைத்து சிரிப்புச் சிந்திருக்கலாம்.

வலிமை இல்லாதவர்களல்ல அவரைப் பின் பற்றுவோர்: உருவிய வாளோடு அல்லவா ஊர்வலம் சென்றிருக்கின்றனர்!

—ஆனுல் இவையெல்லாம் ஏற்படவில்லை!

ஆச்சரியமாக இருக்கிறதல்லவா, இது? காரணம் என்ன தெரியுமா? தாராசிங் வெறும் கலகக்காரர் மட்டுமல்ல; அவரே சொல்லியிருக்கிருர், அகாலி தளத்தவரது மாநாட்டுத் தலைமையுரையிலே,

"நான் இந்த அரசாங்கத்தின் வீழ்ச்சியைத்தான் விரும்புகிறேன்:நாட்டில் குழப்பம் குடிபுகுமே என்பதற்காக அல்ல—இதைவிட மேம்பட்ட நல்லதொரு அரசாங்கம்உருவாகுமே என்பதற்காகத்தான்!

—இந்தக் காரணம்தான், அன்று அமிர்தசரசிலே நடக்க வேண்டிய 'மதுரை'யைத் தடுத்து விட்டது!

எனப்பா, தாராசிங்கைப் பற்றி இவ்வளவு எழுதுகிறீரே, ஒரு கட்சி மாநாடு நடத்தும் போது, இன்னொரு கட்சி அந்த வழியே ஊர்வலம் போவதும், ஊர் அதிரும் படி ஒலி பெருக்கியை உபயோகிப்பதும்தான் அரசியல் நாகரிகமா—என்று கேட்கத் தோன்றும்!

ஆனுல் அந்த நேரத்தை நழுவ விட்டால் தங்கள் பிரச்னைகளைப் புரிய வைக்க அகாலிபர்களுக்கு வேறு சந்தர்ப்பம் கிடையாதே!

லட்சக் கணக்கானவர் நிறைந்த கத்தியுடன் அன்று ஊர்வலம் நடத்தியிருக்கா விட்டால், தாராசிங் யார்; அவர் என்ன சொல்லுகிருர்? எப்படி உருவானர்?-என்பதைப் பற்றியே இந்த தேசிய வீரர்கள் சிந்திப்பதற்கு சமயம் கிடைத்திருக்காதே!

அதனுல்தான் தாராசிங்கிற்கு அன்றைய தினம் ஒரு மாபெரும் அணிவகுப்பையும். மாநாட்டையும் நடத்திக் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது!

அதனுல்தான் ஐந்து மணிநேரம் கதிகலங்கித் தீரவேண்டிய கட்டாய நிலைக்கு கதரணிந்தோர் கொண்டு வரப்பட்டனர்!

நாம் பண்பட்டவர்கள்; எனவே சென்ற ஆவடி மாநாட்டின்போது நேருப் பண்டிதரும், அவரது 'தொண்டரடிப்பொடி ஆழ்வார்க'ளும் காது செவிடு படாமல் டெல்லிக்குத் திரும்பிச் சென்றனர்!

நாம் பொறுமைசாலிகள்; எனவேதான் ஆவடியில் நம் அணிவகுப்பு நடைபெறவில்லை!

அன்று அண்ணு மட்டும் சிறு குறிப்பு காட்டியிருந்தால், ஐந்து மணி என்ன: இருபத்தி நான்கு மணி நேரம் சத்திய மூர்த்தி பந்தலின் எதிரே நம் அணிவகுப்பு நடந்திருக்கும்!

அன்று நம்மிடருந்து 'தப்பியவர்கள்' இன்று அமிர்தசரசிலே அனுபவித்து விட்டார்கள்!

அந்த நற்பணி ஒன்றுக்காகவாவது நாம் தாராசிங்கிற்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம்.

ஆளவந்தார் மனதிலே ஓயாப் போராட்டத்தை எழுப்பிய அந்த ஐந்து மணி நேரத்துக்கு நம் பாராட்டு!

★

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

அழிவு வேலைகளில் ஈடுபடுகின்ற அளவிற்கு மக்களிடையே ஆத்திர உணர்ச்சி வளர வித்தூன்றியவர்கள் யார்?

'அகிம்சை பற்றி இந்தியர்கள் வாய் கிழியப் பேசுகின்றனர்; வெளிநாடுகளில் இதுபற்றி பேசப்படுவதில்லை' இதுவும் பண்டிதரின திருவாசகமதான;

இதையேதான் நாமும் சொல்லி வருகிறோம்!

சரஸ்வதிக்குப் பூஜை போட்டுப் போட்டு, இருக்கும் மிச்சம் மீதி அறிவும் இழக்குள்ளவனுக்குத் தேய்ந்து வருவதைப் போல— அகிம்சையைப் பேசிப் பேசித்தான, 'சிறுதொண்டர்களை' நல்லவர்களாக்கி விடும் புதியவர்கள் கிளம்பி இருக்கிறார்கள்! நாட்டின பல மூலைகளில் இருந்து கிளம்பியிருக்கும் எதிர்ப்புணர்ச்சிக்குக் காரணமான எல்லை அமைப்பு குறித்துப் பேசும் போது "எல்லை நிர்ணயம் பற்றி சர்க்கார் செய்த முடிவுகள் சரியானவை என்று நான கூறவில்லை, யாரும் தவறு செய்வது சகஜம்" பிப்ரவரி 9ம் தேதி சு. மி. ஏட்டில் வெளியாகி இருக்கிறது இந்த வாசகங்கள்.

பொறுப்புள்ள ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டு, பல அரசியல் மாற்றங்களை உண்டாக்கி விடும் பிரச்சனைகளை கையிலே ஏந்தி இருப்பவரின பேச்சுதான் இது.

இதைச் சொல்ல ஒரு நேரு தேவையில்லை - சாதாரணங்களே- என காமராசரே போதும்! என்று தான் அரசியல் உணர்ந்தோர் கூறுவர்.

தவறுகள் ஏற்படுவது சகஜமாம? ஏத்தகைய பிரச்சனைகளில்? பண்டிதரின் பாஷையிலேயே சொல்லுவதென்றால் 'உள்நாட்டுப் புரட்சியை' வளர்த்து விடக்கூடிய பிரச்சனைகளிலா? அதுவும் ஒரு பொறுப்புள்ள சர்க்கார—ஆயிரத்தெட்டு கமிஷன்களைப் பாதுகாப்புப் பட்டாளங்களாகக்கொண்டிருக்கும் சர்க்கார், 'இத்தகைய பிரச்சனைகளில் தவறுகள் ஏற்படுவது சகஜம்தான' என்று ஆலமரத்தடி சாமிகளின் பாணியிலே பதிலிறுப்பதை அரசியல உலகம ஒப்புக் கொள்ளாது! அறிவுலகம் சிரிக்காமலும் இருக்காது!

★

'தவறு நிகழ்வது சகஜம்' என்று கூறுபவர் குற்றத்தைக் குற்றமென உணர்ந்த பிறகும், பாதையை மாற்றிக் கொள்வது தானே சகஜம்! ஒரு சாக்காரலல, தவறிப்பட்ட மனிதன குற்றமிழைப்பது இயற்கைதான! அந்தக் குற்றத்தை உணர்ந்தும் — திருந்தாமல இருப்பது, இயற்கையா? இறுமாப்பா?

தவறு செய்யக் கூடாத சர்க்கார், தவறு செய்து விட்டு—குற்றத்தைக் குற்றமென ஒப்புக்கொள்ளாதது மட்டுமல்ல! குற்றம் செய்து விட்டோம்; இனி திருத்திக் கொள்ள முடியாது! எதிர்ப்பவர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை! என்று திமிர் வாதம் பேசுவது எந்த உலகத்து 'ஜனநாயகமோ' நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை!

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது அதிகாரக் குதிரைகளை அவிழ்த்து விடுவாராம்! 'தவறுகள் நேருவது சகஜம்' என்று குறிப்பிட்ட அதே பெரியவரின் பேச்சுதான் இதுவும்!

'என் தாயகத்தை விடுவிக்கும் வரை, உறை புகும் வேலை என் வாளுக்கில்லை! என்று முழக்கமிட்டபடி, திரண்டிருக்கும் கிளர்ச்சி அமிர்த சரசிலே கூடியோரின இதயங்களிலே அதிர்ச்சி அலைகளை எழுப்பிவிட்டிருக்கிறது.

அதன் விளைவுதான், மாநாட்டிலே பேசியோர் 'ஆகா-ஊகூ' என்று நடுக்கமெடுத்த குரலிலே- 'ஏக இந்திய' ஒற்றுமை குறித்து ஓலமிட்டனராம்!

ஆதிக்க மேட்டிலே மேய்ந்து கொண்டிருக்கும் எறும்புகளுக்கு — புரட்சி எரிமலை என்று வெடித்து விடுமோ என்ற கிலி!

ஆனால் இங்கிருக்கும் காமராசரோ பம்பாயைப் பார்த்துமா புத்திவரவில்லை' என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார்!

'ஜே' போட்டு பெரிய மனிதரான இவரிடம்—இதைத் தவிர வேறு எதைநம்மால எதிர்பார்க்க முடியும்?

கட்டாந் தரையிலே கரும்புத் தோட்டமா பயிராகும்!

★

விடுதலைப் படையினரைப் பார்த்து, வேங்கைக் கூட்டம் கூட உன் வேல் பட்டு சாயந்திருக்கிறதே—என்று நம்மைத் தட்டிக் கொடுக்கும் சரித்திரம், 'வெற்றி வெகு தூரத்தில் இல்லை!' என்பதை நினைவு படுத்துகிறது.

★

"ஜனத் தொகை பூராவும் தனக்கு எதிராக உள்ள பிரதேசத்தை எந்த கொழுத்த சர்வாதிகாரியும் 5000 மைல்களுக்கு அப்பாலிருந்து ஆள முடியாது"- அமிர்தசரஸ் மாநாட்டிலே உரை நிகழ்த்திய தேபர்ஜி — சிந்திய வாசகங்கள்தான் இவை!

5000 மைல்களுக்கு அப்பால் என்பதை, 2000 மைல்களுக்கு அப்பால் என்ற ஒரு சிறு திருத்தத்தோடு; இதையேதான நாமும் சொல்லி வருகிறோம்!

"மேலும் சுதந்திரமாக வாழ உறுதி கொண்டுவிட்ட ஜனங்களை அடக்கி ஆள்வதற்கு இன்னும் ஆயுதம் கண்டு பிடிக்கப்படவில்லை"

வரிந்து கட்டிக் கொண்டு, விடுகிறேனா பார்! என்று நம் மீது பாய வரும், ஆதிக்கவாதிகளுக்கு, தேபர்ஜியின இதே வாசகங்களைத்தான் நினைவு படுத்த விரும்புகிறோம்!

★

மாணிக்கக் கொள்கைகளுக்காக எங்கள் உயிரை வேண்டுமானாலும், காணிக்கையாக்குகிறோம்! என்று திரண்டெழுந்திருக்கும் எம்மை, அடக்குவதற்கு புதிய ஆயுதங்களைத் தேடிக்கொண்டிருக்கும் நேரு பண்டிதரே! நீர் படிக்காத பாடமல்ல இது! பதவி போதையிலே மறந்திருப்பீர்!

மக்களின் இதயக் குமுறல், ஒரு காட்டாற்று வெள்ளம்! அடக்குமுறையும், ஆதிக்க வெறியும் அதிலே ஒரு காகிதப் படகு! மறந்திருந்தால் மீண்டும் நினைவு படுத்திக் கொள்ளுங்கள்!

உரிமைக் கிளர்ச்சி புகையும் எரிமலை — அதன் உச்சியிலே புற்று எழுப்ப வேண்டாம்; புதையுண்டு போவீர்; என எச்சரிக்கிறோம்!

★

இருப்பதோ வெட்டாத கத்தி, கைகளிலோ முடக்கு வாதம்! இந்த நிலையிலேதான், வெட்டி நம்மை வீழ்த்தப் பார்க்கிறார் பண்டிதர்!

" வெட்டாத கத்தி கொண்டு—
வீசாக் கையால்
வெட்டி நமை வீழ்த்தப்
பார்க்கும்........."

புரட்சிக் கவிஞர், 'பண்டிதர்' என்பதற்குப் பதிலாக கொஞ்சம் காரமான வார்த்தையை அந்த இடத்திலே வைத்திருக்கிறார்!

ஆதிக்க வெறியர்களுக்கு சற்று தடித்த தோல் அல்லவா? அதனால்தான்!

★

உட்பொருள் என்ன?

ஓமந்தூரார் பச்சைத் தமிழன்தான்!

அவரது ஆட்சியை திராவிடக் கழகமாய் இருந்தபோது, ஆதரித்தோம்; உண்மைதான்!

அதே நேரம் அவரது கூடாரம் இந்தியைத் திணித்தபோது எதிர்ப்புக் குரல் கொடுத்தோம்! மறுக்கவில்லை!

பிறகு திராவிடக் கழகம் ஆச்சாரியார் ஆட்சியையும் ஆதரித்தது — பச்சை ஆரியம் அவர் உடலில் தலை விரித்தாடிய போது கூட!

ஏன்?

'குத்தூசி'யாரே 12-2-56 'விடுதலை' இதழ் மூலம் பதில் தருகிறார்; கேளுங்கள்.

'ஆச்சாரியார் ஆட்சியை ஆதரித்தோம், அவர் ரேஷன் முறையை எடுத்ததற்காகவும், ஆந்திரரிடமிருந்து சென்னை நகரைக் காப்பாற்றியதற்காகவும்.'

—இதுதான் குத்தூசியார் தரும் விளக்கம்!

'ஆச்சாரியாருக்கு ஆதரவுக் கரம் நீட்டியதற்குக் காரணம் சென்னை நகரை ஆந்திரரிடமிருந்து மீட்டதால்' என ஒப்புக் கொள்ளுகிறார் குத்தூசியார்!

ஆனால் அதே நேரம்,

" குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து அடக்குமுறைக்கு ஆளாகவில்லையா?"

—என்றும் கேட்கிறார் குத்தூசியார்!

—இன்று ஆட்சி பீடத்திலிருப்பதோ பச்சைத் தமிழர்!— எனவே ஆதரிக்கிறார், பெரியார்!

ஆச்சாரியார் ஆரியத்தின் ஏகப் பிரதிநிதியாய் கொலு வீற்றிருந்த போதும்கூட. சற்றுநேரம் அதை மறந்துவிட்டு சென்னை நகரைக் காப்பாற்றியதற்காகவது அவரை ஆதரிக்க வேண்டிய நிலை பிறந்தது!

★ ஆனால் காமராசர் தேவிகுளம்; பீர்மேடு; செங்கோட்டையின் ஒருபகுதி இவைகளைப் பறிகொடுத்துவிட்டு உட்கார்ந்திருக்கிறாரே; இவரை எப்படி ஆதரிப்பது!

★ தமிழரின் உடைமையைக் காப்பாற்றாத காமராசருக்கு சாமரம் வீசவேண்டிய அவசியம் என்ன?

★ ஆச்சாரியார் சென்னையையாவது காப்பாற்றிக் கொடுத்தாரே! இந்த விருதுநகரார் அதுகூடச் செய்யவில்லையே?

★ அந்த அளவுக்குத் துணிவும்; திறமையு மில்லாதவர் பால் சிரித்து நிற்க வேண்டியதின பொருள யாது?

—அருமைத் திராவிடக் கழகத் தோழர்களே! உங்கள் மனதிற்குள்ளே முளைவிட்டுக் கிளம்பும் இந்தக் கேள்விகளைக் குத்தூசியார் பால கேளுங்கள்!

★

உங்கள் பார்வை

பூனா
12—2—56

வெற்றி காண்போம்!

ஆசிரியர் அவர்களுக்கு,

தூங்கும் தமிழினம் விழிப்படைவதற்கும், இந்தியாவின் பல பாகங்களிலும் தமிழன் எவ்வாறு வரவேற்கப் படுகிறான், எந்த மாதிரி அந்தஸ்து வகிக்கிறான் என்பதற்கும், நான் பணியாற்றும் இராணுவத்திலேகூடப் பிற இனத்தால் தமிழன் எவ்வாறு அடக்கப்பட்டு, பயனற்ற நிலையில் காலந்தள்ளி வருகிறான் என்பதை நினைக்கும் போதும் கண்ணீர் வருகிறது.

மலையாளிகள் நமக்கு எதிரிகள் என்று பிறந்த நாள் கொண்டாட்டத்தில் பறையறைந்தது பெரியார்தான். இன்று கூட்டு முன்னணியில் சேர மறுக்கிறார். ஆகவே, நீங்களும் இன்னமும் தயங்காமல் தமிழனின் தன்மானத்தைக் காக்க 20-ந் தேதி போராட்டத்தில் அரசியல் வேற்றுமைகளை அறவே மறந்து குதியுங்கள்! இந்த நேரத்தில் லாப நஷ்டக் கணக்குப் பார்க்கும் தலைவர்கள் தமிழ் நாட்டிற்குத் தேவையில்லை.

இதில் வெற்றி பெற்ற பின்னரே வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து நாம் மீள போராட வேண்டும்.

வாழ்க திராவிடம்!

ஜி. சாமி.

★

சென்னை—14
14—2—56

தூரத்துப் பச்சை!

ஆசிரியா அவர்களுக்கு,

நான் சமீபத்தில் டில்லிக்குச்செல்லும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அங்கே ஒருசில தெரியாத இடங்களுக்குப் போகும் பாதையை ஆங்கிலத்தில் கேட்டால் யாரிடமிருந்தும் பதிலே வரவில்லை! நாகரீக உடை அணிந்த பலருக்கு ஆங்கில அரிச்சுவடி கூட தெரியவில்லை. பின் இந்தியில் கேட்ட பிறகுதான் விவரங்கள் தெரிவித்தார்கள்.

அது மாத்திரமல்ல. டில்லி இந்தியாவின் தலைநகரம்! மத்திய ஆட்சி உள்ள இடம்! அந்த நகரத்திலே பாரீசையும் மிஞ்சும் விபச்சார விடுதிகள்!

ஜி. பி. ரோடு, குதப் ரோடு—என்ற இரு பெரிய தெருக்கள்—இரவு ராணிகளுக்காகவே ஒதுக்கப் பட்டிருக்கின்றது. மாலை 4 மணியிலிருந்து இரவு 12 மணி வரை இந்தத் தெருக்களில் மானத்தை விலை கூறும் மாதரசிகள்—வீட்டோரம் நின்றபடி போவோர் வருவோரை எல்லாம் கைநீட்டி அழைக்கிறார்கள்!

ஆண்களும் சந்தையிலே காய்கறி விலை பேசுவதுபோல—பெண்களை விலை பேசுகிறார்கள். அவமானம்! அவமானம்! இந்த அநியாயங்களை அடக்க முடியாத சர்க்கார்தான் வாய்வீரம் பேசித் திரிகிறார்கள்!

இராம. தண்டபாணி.

★

முதல் பக்கம்......

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

கண்ணம்மாவின் கணவனுக்காக! எப்படியோ ரத்தினம் தீய வழியில் செல்லாமல் இருந்தால் போதும் என்ற முடிவிற்கு வந்த கண்ணம்மா சினிமா கம்பெனி முதலாளி ஒருவருடைய வீட்டில் வேலைக்காரியாக உழைக்க ஒப்புக் கொண்டாள். சினிமா முதலாளி என்றால், ஒரு ஐயாயிரம் ரூபாயை கையிலே வைத்துக் கொண்டு பல்லவி பாடிக் கொண்டிருப்பவர் அல்ல; கொஞ்சம் பெரிய புள்ளி!

'கண்ணம்மா பிடித்தாலும் புளிய மரமாகப் பார்த்து தான் பிடித்திருக்கிறாள்' என்று சில வயிற்றெரிச்சல்காரர்கள் பேசிக் கொண்டதும் அவள் காதில் விழாமல் இல்லை!

★

ஒருநாள், வேலை விஷயமாக வெளியூருக்கு போய் வருகிறேன் என்று புறப்பட்ட ரத்தினம் பல மாதங்களாகியும் திரும்ப வில்லை. கண்ணம்மா ஒவ்வொரு நாளையும் ஒரு யுகமாகக் கழித்துக் கொண்டிருந்தாள். எஜமானியம்மாள், பத்திரிகைகளைப் படிக்கும்போது எட்டி நின்று கேட்பாள். கொலை கொள்ளை, போன்ற செய்திகளைக் கேட்கும்போது அவள் நெஞ்சு திடுக்கிடும். இதயம் குழம்பும். 'அய்யோ கடவுளே! என்னைக் காப்பாத்து' என்று முணுமுணுத்தபடி, அவள் கழுத்திலே ரத்தினம் கட்டிவிட்டுப் போன மஞ்சள் கயிற்றை கண்களிலே ஒத்திக் கொள்வாள்.

இப்படி அவள் வடித்த கண்ணீர் ஆயிரம் சோகக் கதைகளைச் சொல்லும். கண்ணம்மா துயர பிம்பமாக மாறிக் கொண்டிருந்தாள்!

"கண்ணம்மா, கண்ணிருந்தும் குருடியாக இருக்கிறாயே! பைத்தியக்காரி, கண்ணாடிக்கு முன்னால் நின்று பாரடி உன் கட்டழகை! பறித்துத்தின்ன ஒரு பட்டாளமே காத்திருக்கிறது. நீ விழி யசைத்தால் போதும், கண்ணம்மா!

இதைக் கேள், நீ ஒரு அழகு தெய்வம், உன் போன்றவர்களுக்கு, நாட்டிலே பக்தர்கள் ஏராளம்! உலகம் கிடக்கிறது உருட்டு பொம்மை! கைபட்டாலும் அசையும், காற்று பட்டாலும் ஆடும். என்ன சொல்லுகிறாய்" ஒவ்வொரு மனிதனிடமும் தூங்கிக் கிடக்கும் மிருக உணர்ச்சி, கண்ணம்மாளுக்கு மட்டுமென்ன விதிவிலக்கா? அந்த போதை தலையணையை நனைத்தபடி குடிசையிலே புரண்டு கொண்டிருக்கும்போதெல்லாம், இத்தகைய தீய ஆசைகள் அவள் மனத்தின் அமைதியைக்குலைத்துக் கொண்டிருந்தன.

சென்றவன் திரும்பக் காணோம் தின்று கொழுத்த சில 'இரவு ராஜாக்கள்' கண்ணம்மாவின் குடிசையை வட்டமிட ஆரம்பித்தனர்.

அதற்குப் பிறகுதான் கண்ணம்மா எஜமானி அம்மாளிடம் உத்திரவு கேட்டுக் கொண்டு, அரண்மனைபோல இருக்கும் அந்த மாளிகையிலேயே ஒரு ஒதுக்குப் புறத்தில், உடலைச் சுருட்டிக் கொண்டு, இரவைக் கழிப்பாள். 'புண்ணிய மூர்த்திகள்' பிறந்து செத்த இந்த சமுதாயத்திலேதான் ஒரு பெண், இவ்வளவு சுதந்திரமாக (!) வாழ முடிகிறது!

★

ஒரு நாள் இரவு படப்பிடிப்பிற்காகச் சென்றிருந்த முதலாளி இரவு பனிரெண்டாகியும் வரவில்லை, வெளிப்புறக் கதவுகளை அடைத்து விட்டு கண்ணம்மா வழக்கமான இடத்திலே வந்து படுத்துக் கொண்டாள். பகலெல்லாம் உழைத்த களைப்பு. கவலை வேறு. தன்னை மறந்து தூங்கி விட்டாள்.

முகிலோடு அறுந்து தரையிலே விழுந்துவிடுமோ; என்றெண்ணும் படி உச்சிவானத்திலே தொங்கிக் கொண்டிருந்த முழுநிலவு கண்ணம்மாளின் பருவச் சுமைக்கு தங்க மூலாம் பூசிக் கொண்டிருந்தது!

இரவு மணி இரண்டு: பூனை போல அடிமேல் அடிவைத்து ஒரு உருவம், கதவோரத்திலே வந்து நின்றது; அயர்ந்த தூக்கத்தில் கனகக் கொடிபோல துவண்டு கிடந்த கண்ணம்மாவை அந்த நிழல் உருவம் கண் கொட்டாமல் உற்றுப் பார்த்துவிட்டு, இடையிலே சொருகி இருந்த ஏதோ ஒரு பொருளைத்தடவிக் கொண்டிருந்தது; இமை மூடித்திறக்கும் நேரந்தான்: 'அய்யோ' என்ற அலறல்! உடலை சுருட்டி வாரிக் கொண்டு எழுந்தாள் கண்ணம்மா; மின்சார விளக்கு போடப்பட்டது; 'அயோக்கிய ராஸ்கல்' அந்த ஆபத்தான நேரத்திலும், ஆங்கில மோகம் அந்தப் படாதி பதியை விட்டுப் போகவில்லை; ஒன்றுமே புரியாமல் கண்களைத் துடைத்தபடியே திகைத்து நின்ற கண்ணம்மா, எதிரே ஒரு உருவம் ரத்தக் குழம்பிலே முகம் புதைத்தபடி பிணமாகி இருப்பதை பார்த்தாள்; அவள் கண்களில் மிரட்சி கூத்தாடிற்று; அகலத் திறந்த கண்களோடு, அந்த பிணத்தின் முகத்தை புரட்டிப் பார்த்தாள்; 'அய்யோ அத்தான்;' இந்த சோகக் குரல் அந்தமாடி வீட்டின் நெடுஞ் சுவற்றில் பயங்கரமாக மோதி எதிரொலித்தது;

முதலாளிக்கு ஒன்றுமே புரியவில்லை! ஆத்திரம்; அதிர்ச்சியாகி அச்சத்திலே வந்து நின்றது! அவர் கை கால்களில் நடுக்கம் ஏற்பட்டது;

'என்ன, கண்ணம்மா, இவன் யார்?

இதற்கு அவள் பதில் சொல்லவில்லை; 'என் வாழ்வைப் பாழாக்கி விட்டீர்களே—ஐயா!' என்று கூறிவிட்டு தேம்பி யழுதாள்;

கொலைக் குற்றம், கோர்ட், தூக்குமேடை, இப்படிப் பல 'குளோசப்' காட்சிகள் அவர் கண்களுக்கு முன்னால் ஓடி மறைந்தது;

கண்ணம்மா, என்னை நீ தான் காப்பாற்ற வேண்டும்; திருட வந்தவன் என்று நினைத்து அவசரப்பட்டு விட்டேன்; உன் கால்களைப் பிடிக்கிறேன்; கருணை காட்ட வேண்டும், கண்ணம்மா.......கண்ணம்மா;......... முதலாளி தணற் புழுவெனத் துடித்தார்; 'அழாதே கண்ணம்மா, அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் விழித்துக் கொண்டால், நான் ஆபத்தில் சிக்கிக் கொள்வேன்; என்னைக் காப்பாற்று—இனி என் குல தெய்வம் நீதான்" என்று குமுறினார்.

வாசலிலே நடக்கும் இந்த குழப்பத்தைக் கேட்ட எஜமானி



யம்மாள் எழுந்து வந்தாள்; நடந்தவைகளை அறிந்து, 'நீ தானம்மா என் சகோதரி, எனக்கு மாங்கல்ய பிச்சைகொடு' என்று கண்ணம்மாவின் கரங்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

★

கண்ணம்மாளின் விழிகளிலே முத்தென அரும்பு விட்ட கண்ணீர்—அவள் மார்பகத்தை நனைத்தது:

★

சமுதாயத்தின் கண்களுக்கு மறைந்து மறைந்து நடமாடிக் கொண்டிருந்த அந்தப் பிணம்; இரவோடு இரவாக உலகத்தின் பார்வையிலிருந்தே மறைக்கப் பட்டு விட்டது:

★

கண்ணம்மா கண்களைத் துடைத்தபடியே வான மண்டலத்தை அண்ணாந்து பார்த்தாள்: அப்பொழுதுதான் அந்த கீழைப் பாட்டையிலே விடி வெள்ளி, சுடர் விட்டுக் கொண்டிருந்தது.

★

கண்ணம்மா! இப்பொழுது கள்வனின் மனைவியல்ல; பஞ்சணை மஞ்சத்திலே புரளும், ஒரு படமுதலாளியின்—ஆசை நாயகி! பழைய நினைவில் அந்தக் கட்டழகியை 'கருப்பாயி' என்று அழைத்துவிடப் போகிறீர்கள்: அது அவள் சுய சரிதையின் முதல் பக்கம்! ஆனால் இன்றோ அவள் ஒரு [illegible] ரோஜா!

பிப்ரவரி 20-ந் தேதி திங்கட்கிழமை
பொது வேலை நிறுத்தம்!

தமிழ் வழங்கும் பகுதிகள் ' தமிழ் மாநிலம் ' என அமைய வேண்டும் என்பதுதான் தமிழர்களின் விருப்பம். அத்தகைய தமிழ் மாநிலத்தை உருவாக்கும்படி வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் அரசினரை மக்கள் வற்புறுத்தி வந்தனர்.

மாநிலங்களை மொழிவழி திருத்தி அமைக்க வேண்டும் என்பதை காங்கிரஸ் உள்ளிட்ட எல்லா அரசியல் கட்சிகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

ஆனல் இப்போது மாநிலங்களை திருத்தி அமைக்க வந்த பசல் அலிக் குழுவினர், தமிழர்களின் உரிமையைப் புறக்கணித்து, தமிழகத்துடன் நியாயமாக இணைந்திருக்க வேண்டிய தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சின், சித்தூர், பாலக்காடு ஆகிய தாலுக்காக்களை கேரளத்துடன் இணைத்து விடும்படி அரசுக்கு சிபார்சு செய்துள்ளனர்.

வடக்கே சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளுக்கு எல்லைக் கமிஷன் அனுப்புவதாக சொன்ன வாக்குறுதியும் இன்றளவும் நிறைவேற்றப்படவில்லை; பசல் அலிக் குழுவினரும் இதைப் புறக்கணித்திருக்கின்றனர்.

இவை தமிழருக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளாகும்!

இந்திய அரசினரால் இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதிகளைத் துடைப்பதற்கான வழிகளை சென்னை அரசு தீவிரமாக மேற்கொள்ளவில்லை.

அதோடு—தட்சணப் பிரதேசம், என்ற ஏற்பாடு ஜனநாயகத்திற்கு விரோதமானது என்பதோடு, தமிழ் மாநில அமைப்புக்கு உலை வைக்கும் கொடுஞ் செயலாகும். இந்திய அரசின் இந்த நடவடிக்கையால் மொழிவழி இனங்களிடையே சச்சரவுகள் விளைவதன்றி, உருவான பலன் ஏற்படாது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

மேலும் தமிழ் மாநிலத்திற்கு 'சென்னை ராஜயம்' என்ற பெயரை நீக்கிவிட்டு 'தமிழ்நாடு' என்று பெயரிட வேண்டுமென்று வற்புறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம், இத்தகைய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு;

1. தட்சிணப் பிரதேசம் அமைக்கப்படு மென்ற கருத்தை அறவே கை விட்டு மொழிவழி மாநிலம் அமைக்கப்பட்ட வேண்டும்.
2. தமிழக எல்லையோரத் தமிழ்ப் பகுதிகளை, தமிழகத்தோடு சேர்க்கவும், பிறமொழிப் பகுதிகளை, அதனதன் மொழி வழங்கும் மாநிலங்களோடு சேர்க்கவும், ஒரு எல்லைக கமிஷன் நியமித்து ஜனநாயக வழியில் முடிவு செய்ய வேண்டும்.
3. சென்னை இராஜ்யம் என்ற பெயர் 'தமிழ்நாடு' என்று மாற்றப்பட வேண்டும்.

★

இக்கோரிக்கைகளை முன்வைத்து, தமிழர்கள் ஒருமனதோடு பிப்ரவரி 20ம் நாள் திங்கட்கிழமை, பொது வேலை நிறுத்தமும் கடையடைப்பும் நடத்த வேண்டும் என்று சர்வகட்சிக் கூட்டணியால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பேரன்பு கொண்டோரே! — பெரியோர்களே!!

நீங்கள் அனைவரும்,

பிப்ரவரி 20-ம் நாளன்று
பொது வேலை நிறுத்தத்தை

அமைதியான முறையில், பலாத்காரம் தலை காட்டாமல், சேதம் விளைவிக்காமல், யாரையும் துன்புறுத்தாமல்,

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு—இவைகளோடு தமிழரின் உரிமையையும் தன்மானத்தையும் நிலைநாட்டுமபடி உங்கள் அனைவரையும் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பி. டி. ராஜன் (நீதிக் கட்சி)	கே. விநயகம் (வடக்கெல்லை பாதுகாப்புக் குழு)
கே. சி. சுப்பிரமணியம் ,,	சித்தூர் சீனிவாசன் ,,
சி.என்.அண்ணுதுரை (தி.மு.க.)	ஏ.ரத்தினம் (தாழ்த்தப்பட்டோர்
இரா. நெடுஞ்செழியன் ,,	எம். சுந்தரராஜ் ,, பெடரேஷன்)
என். வி. நடராசன் ,,	கவிஞர் பாரதிதாசன் (புதுவை மக்கள் முன்னணி)
ம. பொ. சிவஞானம் (தமிழரசு	வி. சுப்பையா ,,
சின்ன அண்ணுமலை சுக்கழகம்)	எஸ். சுயம்பிரகாசம் (பார்லிமெண்டரி கட்சி)
ஜீ. உமாபதி ,,	எம். பி. சுப்பிரமணியம் ,,
ப. ஜீவானந்தம் (கம்யூனிஸ்ட்)	வி. வி. இராமசாமி ,,
மணலி கந்தசாமி ,,	நாரண துரைக்கண்ணன் (எழுத்தாளர் சார்பில்)
ஏ.எஸ்.கே.அய்யங்கார் ,,	டி. கே. ஷண்முகம் (நடிகர் சார்பில்)
எஸ்.சி.சி. அந்தோணிப் பிள்ளை (சோஷலிஸ்ட்)	எ. கஜபதி நாயகர் (தமிழர் பேரவை)
எம். சின்னசாமி ,,	பிளச்சர் (இணைப்புக் கமிட்டி)
பி.எஸ். சின்னதுரை (பிரஜா சோஷலிஸ்டு)	
எ. சுப்பிரமணியம் ,,	

—சர்வ கட்சிக் கூட்டணி.

டயரைப் பழிக்கும் கதர்...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

அன்று நாட்டிலே உடைப்பெடுத்த செங்குருதி வெள்ளம் இன்னும் ஓடிக்கொண்டுதனே இருக்கிறது; பார்க்கப்போனுல் இன்று அதில் அதிகமாக வல்லவோ ஏதுமறியாதோரின் பிணங்கள் மிதந்து கொண்டிருக்கின்றன!

டயரைவிட மனிதத் தன்மை கொண்டவர்கள் இவர்கள் என்பதற்கு எந்தச் சான்றைக் காட்ட முடியும்?

வாயாரச் சிரித்தவர்களுண்டா; வயிருரச் சாப்பிட்டவர்கள் இருக்கிறார்களா, காங்கிரஸ் மந்திரிகளைத் தவிர?

பூவோடும் மஞ்சளோடும் வாழ்வோம், என்ற மன அமைதியையாவது சுமங்கலிகளுக்கு இந்த அரசியலார் அளித்திருக்கிறார்களா? ரெயிலில் பிரயாணம் செய்வோரின் மூளையைக் கூட அல்லவா உறிஞ்சிக் கொண்டிருக்கின்றனர்!

—இவர்கள் எப்படி டயர் வழங்கியது அநீதி என்று கூற முடியும்?

உண்மையிலேயே மானவுணர்ச்சி சிறிதளவு இருக்குமேயானல் இவர்கள் ஜாலியன் வாலாபாக் தோட்டத்தை இடித்துத் தரை மட்டமாக அல்லவோ ஆக்கி யிருக்க வேண்டும்: பொது மக்கள் எங்கே தங்களையும் டயரையும் ஒப்பிட்டு விடுவார்களோ என்ற நினைப்பின் பேரில்!

புலி புலால் உணவிலேயே வாழ்கிறது என்று புலம்பி, அது மீதம் வைத்து விட்டுப் போன மான் இறைச்சியை ஆட்டிடம் காட்டி ஆலிங்கனத்துக்கு அழைத்ததாம்; அதைப் போலத்தானே இவர்கள் செயலும் இருக்கிறது!

வெள்ளைக்காரன் புலியென்ருல் இவர்கள் ஓநாய்களாகத் தானே இருக்கிருர்கள்!

அந்தப் புலி நேரடியாகத் தாக்கியதென்ருல், இந்த ஓநாய் இருட்டு வேளையிலே, ஜனநாயகக் கொடி பிடித்துக் கொண்டு ஜன்னல் வழியே பாய்ந்து தூங்குகிற குழந்தைகளையல்லவா கவ்விச் செல்கிறது!

உத்தரப் பிரதேசத்திலே பருத்திக் கொட்டையைச் சாப்பிடச் சொன்ன முன்ஷி கவர்னராய் வீற்றிருந்த பகுதியிலே ராமு என்ற பையன் சிறுவயதில் ஓநாய் ஒன்றினுல் தூக்கிச் செல்லப்பட்டு பிறகு மீட்கப்பட்ட போது அவனுல் நிமிர்ந்து நிற்க முடியவில்லையாம்; அந்த கதியில் தானே இவர்களுடைய தோட்டாவுக்குத் தப்பியவர்களும் கூனனுக, குருடனுக, நொண்டியாக, முடவனுக-இப்படி அங்கம் பழுதுபட்டவர்களாக வாழ்க்கை நடத்தி வருகிருர்கள்!

—ஆட்சி பீடத்திலே படிந்திருக்கும் இந்த அழுக்குத் திரையை காந்தீயக் கதரினுல் மறைக்க முடியாதே!

—காங்கிரசிடம் இன்னும் 'நப்பாசை' வைத்துக் கொண்டிருக்கும் நம்மவர்கள் இதை உணர வேண்டாமா? உண்மை நிலை அறிய வேண்டாமா?

★

கொள்கை வளருது கோபுரம் போலே!

பெரம்பூர்
18—2—56 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு செம்பியம் 20-வது வட்ட தி. மு. கழக சார்பில் பெரம்பூர் ஏரிக்கரை மைதானத்தில், தோழர் கு. அருண்மொழி தலைமையில் துணைப் பொதுச் செயலாளர். என். வி. நடராசன் கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் தேவிகுளம், பீர்மேடு பிரச்சினை குறித்து பேசுவர்.

★

சேலூர் (வ. ஆ.)
18-2-56 மாலை 6 மணியளவில் சேலூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தோழர்கள் ஏ. கே. வில்வம், எஸ். எஸ். தென்னரசு, மற்றும் பலர் பேசுவர்.

★

சென்னை
19-2-56 சென்னையிலே நடைபெறவிருக்கும் சர்வ கட்சிப் பொதுக் கூட்டத்தில் தி. மு. க. சார்பில் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் கலந்து கொள்வார்.

★

குடந்தை
19-2-56 மாலை 6 மணியளவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் மற்றும் பலர் பேசுவர்.

★

வேலூர்
19-2-56 மாலை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தோழர் கே. ஏ. மதியழகன் மற்றும் பலர் பேசுவர்.

★

திருக்கழுக்குன்றம்
19-2-56 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு திருக்கழுக்குன்றம், தெற்கு மாட வீதியில் தோழர் தி. ஆ. சண்முகம் அவர்கள் தலைமையில், தோழர்கள் சி. பி. சிற்றரசு. சு. குருநாதன், க. குருசாமி ஆகியோர் பேசுவார்கள்.

★

அண்ணுமலை நகர்
22-2-56 புதன்கிழமை மாலை 5—மணியளவில் திராவிட முன்னேற்றக் கழக மாணவர் கிளை சார்பில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணு, துணைப் பொதுச் செயலாளர் என், வி. நடராசன், தில்லை—வில்லாளன் எம். ஏ. ஆகியோர் கலந்து கொள்வர்.

★

பட்டிவீரன்பட்டி
22-2-56 மாலை 6 மணியளவில் பட்டிவீரன்பட்டியில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தோழர் கே. ஏ. மதியழகன் பி. ஏ. அவர்களும். மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவார்கள்.

★

திருமங்கலம்
22-2-56 ஞாயிறு மாலை 5-30 மணியளவில் நகர் பந்தடித் திடலில் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், எம். ஏ. ரசாக் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

அகல் விளக்கு

பிறை வானம்

பிள்ளைகள் பகுதி

அன்புள்ள முத்து,

உன் கடிதம் கிடைத்தது. பள்ளித் தேர்வில் வெற்றி பெற்ற நாம் இருவரும் ஒருவருக் கொருவர் பரிமாறிக் கொள்ள வேண்டியது மகிழ்ச்சிக் கடிதங்கள்! ஆனால் நீ அனுப்பியதோ அனுதாபக் கடிதம்—இதோ, நான் எழுதுவதோ வேதனைக் கடிதம்! என் அண்ணி—அன்புக்கு உறைவிடமான—அருமைக்கு அருமையான—என் அண்ணி இறந்து விட்டது குறித்து வருந்தியிருக்கிறாய்; ஆனால், முத்து—இதோ நான் இன்றுவரை அழுது கொண்டிருக்கிறேன்; என்றுதான் என் அழுகை நிற்குமோ, தெரியவில்லை! உனக்குத் தெரியும் முத்து. நீகூட அடிக்கடி சொல்வாயே, என் அண்ணி எனக்காகவே, என் மகிழ்ச்சிக்காகவே வாழ்ந்தார்கள். அதைப்போல மாண்டதும் எனக்காகவேதான்! கேள் நண்பா, அந்தக் கதையை!

"அண்ணி"—இந்தச் சொல்லையே எனக்கு சரியாக உச்சரிக்கவே தெரியாது. அந்த வயதில் தான் எனக்கு அண்ணி கிடைத்தார்கள்.

"அந்தி" என்றுதான் நான் அழைப்பேன். "என்னடா கண்ணு?" என்பார்கள் என் அண்ணி திலகா. அதிலே அன்பு குழையும். "இந்தா, காபி சாப்பிட்டுவிட்டு ராஜாமாதிரி பள்ளிக்கூடம் போறியா?" என்பார்கள். ஆனால் நானோ "முடியாது"என்பேன். உடனே எனக்குத் தலைவார ஆரம்பித்து விடுவார்கள், "தலைவாரி பூச்சூட்டி உன்னை-பாடசாலைக்கு" என்று பாடிக் கொண்டே.

பள்ளி என்றால் எனக்குப் பிடிக்காதுதான். ஆனால், நான் ஒரு நாள்கூட நிற்காமல் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் சென்றதற்காக தலைமை ஆசிரியர் பரிசுகூடக் கொடுத்திருக்கிறார் எனக்கு! அதுதான் அதிசயம். அதற்குக் காரணம் என் அண்ணி திலகாதான்.

காலச் சக்கரம் உருண்டு கொண்டிருந்தது.

தலைவாரி பூச்சூட்டும் நிலை மாறி, 'கிராப்பு' தலையாக மாறி விட்டேன் நான். ஆமாம்; நான் எட்டாம் வகுப்பு மாணவனானேன்.

ஆனால், அது வரையில் அண்ணிக்கு ஒரு குழந்தை கூடப் பிறக்கவில்லை. அண்ணனுக்கு அதே கவலை! அவர் ஓர் வைதீகப் பேர்வழி! யாரோ ஏதோ சொன்னதையெல்லாம் நம்பிவிட்டு ஒரு நாள் திடீரென்று "காசிக்கு யாத்திரை போகவேண்டும்" என்றார். போய் வந்தால் குழந்தை பிறக்கும் என்பது அவர் எண்ணம்! என் அண்ணி மறுத்துப் பார்த்தார்கள். அது பலிக்கவில்லை.

அன்று மாலை...

பள்ளியை விட்டு நான் வீடு வந்தேன். வந்ததும் வராததுமாக அண்ணி, "கண்ணு, நீ ஒரு மாதத்திற்கு பள்ளிக்கூடத்திற்கு 'லீவு' போடு" என்றார்கள்.

"அட, லீவா? எதுக்கு?" என்று அடுக்கினேன் நான்

"ஏனு? இன்னைக்கு நாம் காசிக்குப் போறோம். அதுக்குத்தான்"

"பலே, அண்ணி!" என்று ஒரு துள்ளு துள்ளினேன். அந்தச் சமயம் பார்த்து என் அண்ணன் உள்ளே நுழைந்தார்.

"என்ன, தம்பிக்கு ஒரே மகிழ்ச்சி?" என்று அண்ணியைப் பார்த்துக் கேட்டார்.

"கண்ணன்தான் பள்ளிக்கூடம் விடுமுறைன்னா சாப்பிடக்கூட மறந்து விடுவானே"—என்னைக் கிண்டல் செய்யும் தோரணையில் சிரித்துக் கொண்டே சொன்னார்கள் அண்ணி!

"என்ன, லீவா?"-ஆச்சரியத்துடன் கேட்டார் அண்ணன்.

"உங்களுக்கு எதுதான் புரியப்போகுது! ஊருக்குப் போனா, குறைஞ்சது ஒரு மாதமாகாதா? அதுக்குத்தான் 'லீவு' போடச் சொன்னேன்' என்றார்கள் அண்ணி!

"அப்படின்னா, கண்ணனையும் அழைச்சுக்கிட்டுப் போறதா, என்ன? அதெல்லாம் முடியாது. பரீட்சையெல்லாம் நெருங்கிகிட்டே வருது. இப்ப, பள்ளிக்கூடம் போகாம இருந்துட்டா எப்படி படிக்கிறது? இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம்" என்று கண்டிப்பான முறையில் கூறிவிட்டார் அண்ணன்.

என்னைப் பக்கத்து வீட்டுப் பரிமளாவிடம் ஒப்படைத்து விட்டு அன்றிரவே காசிக்குப் பயணமானார்கள். அவர்களை வண்டியில் ஏற்றிவிட்டு வீட்டினுள் நுழைந்தேன். அப்பொழுதுதான் "கண்ணு" என்று என்னைக் கூப்பிட்டாய் நீ!

முத்து! நீ அன்று என்னுடன் நட்பான திலிருந்து நாம் இருவரும் ஒன்றாக ஆடினோம்; பாடினோம்; படித்தோம்; படுத்தோம்; ஒன்றாகப் பழகினோம். ஆனால், நீ என்னுடன் பத்து தினங்கள் இருந்து விட்டு, ஒரு நாள் ஊருக்குப் போவதாகக் கிளம்பினாயே, அன்றுதான்—அன்று இரவுதான் அந்த சகிக்க முடியாத நிகழ்ச்சி நடந்தது. முத்து, எனக்கு அதை எழுதவே முடியவில்லை. நினைத்தாலே நெஞ்சம் துடிக்கிறது.

அன்றிரவு — நான் தூக்கம் வராமல் புரண்டு படுத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது....

"கண்ணு, கண்ணு!" என்று கதவு தட்டும் குரல் கேட்டது. திடுக்கிட்டு எழுந்தேன்.

"கதவைத் திற, கண்ணு"—மறுபடியும் அதே குரல். அது என் அண்ணியின் குரல்தான்.

கதவைத் திறந்தேன். எதிரே என் அண்ணி! அழுது அழுது வீங்கிய கண்கள்—சோகத்தால் வாடிப்போன முகம்—இப் பரிதாபக் கோலத்தோடு என் அண்ணியேதான்!

"ஐயோ, கண்ணு" என்று என்னைக் கட்டிப் பிடித்து அழ ஆரம்பித்து விட்டார்கள். நடந்ததை என்னால் விவரிக்க முடியவில்லை, முத்து! சுருக்கமாய் எழுதுகிறேன் படி. காசிக்குப் போனவர்கள் கங்கையிலே குளித்தார்களாம். குளிக்கும்போது என் அண்ணன் சுழலில் சிக்கிக் கொண்டாராம். அவரைக் காப்பாற்ற யாரும் முன்வரவில்லையாம். "ஐயோ... ஐயோ" என்று எதையுமே சொல்ல முடியாமல் கதறி விட்டார்களாம் என் அண்ணி. பக்கத்திலிருந்தவர்கள், "புண்ணியவான் போலிருக்கு. அதான் அவருக்கு நல்ல "மோட்சம்" கிடைச்சுது" என்று கூறினார்களாம்.

முத்து, பிள்ளை வரம் கேட்க காசி சென்ற என் அண்ணி, கணவனையும் கங்கைக்கு தந்து விட்டு வீடு திரும்பினார்கள்! ஆனால் அண்ணியிடமிருந்து பறிக்கப்பட்ட மகிழ்ச்சியும், மன நிம்மதியும் அதன் பிறகு திரும்பிவே வரவில்லை! அண்ணி வேளைக்கு வேளை சாப்பிடுவது கூட இல்லை; ஆகவே நாளுக்கு நாள் இளைத்தார்கள். ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம் முத்து. அவர்கள் வாழ்ந்தது என்னவோ எனக்காகவேதான்!

அப்பப்பா! எத்தனை அன்பு என் மேல்!

இந்நிலையில் ஒரு நாள்... பள்ளியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன், பல்லெல்லாம் தெரிய, சிரித்து வரவேற்கும் அண்ணியை நினைத்தபடி. அந்த நினைப்பில், நான் நடந்து செல்வது போக்குவரவு அதிகமுள்ள பெரிய சாலை என்பதைக் கூட நான் மறந்து விட்டேன். அதன் விளைவோ?...

ஆடி வந்த ஒய்யாரமான மோட்டார் ஓடி வந்த என்னைக் கீழே தள்ளிவிட்டுத்தான் நின்றது. என் நெற்றியிலே பலத்த அடி! ரத்தம் ஆறாய்ப் பெருக்கெடுத்தது. நான் நினைவிழந்தேன்.

★

அதன் பிறகு நான் கண் விழித்தபோது, என் பக்கத்திலே துரும்பாகி விட்ட என் அண்ணி—டாக்டர்—மற்றோர் நின்று கொண்டிருந்தனர்.

என்னைப் பரிசோதித்த டாக்டர், "பையனுக்கு, உடலிலிருந்து ரத்தம் நிறைய விரயமாகிவிட்டது. அதற்கு ஈடு கொடுத்தால்தான் பையனைப் பற்றி சொல்ல முடியும்" என்றார். விவரிக்க முடியாத நிலை! இரண்டு ஜீவன்கள்—அதாவது, நானும், என் அண்ணியும்!

முத்து, என் அண்ணியின் பாசத்தை அப்பொழுதுதான் கண்டேன். என்னைத் தூக்கிக் கொண்டு சிவன் கோயிலுக்கு போய் கல்லிடம் உயிர்ப் பிச்சைக் கேட்கவில்லை. தன் உடலிலிருந்து ரத்தத்தைக்கொடுத்து என் உயிரைக் காப்பாற்றி விட்டார்கள், அன்பின் உருவமாம் என் அண்ணி!

என் அண்ணியின் உடல் நிலை கண்டு டாக்டர்கூட எச்சரித்தார். ஆனால், என் அண்ணி திலகா அவர்கள் சொல்வதை செவி கொடுத்து கேட்கவில்லை. என்னைக் காப்பாற்றி விட்டார்கள்.

ஆனால்...

என் அண்ணியின் உயிருக்கே அது ஆபத்தாய் முடிந்து விட்டது முத்து. படுத்த படுக்கையானார்கள். ஐயோ, முத்து, எப்படி சொல்வேன் அதை! அண்ணி என் கண்களைவிட்டு மறைந்து விட்டார்கள்!

ஆனால், அன்புள்ள நண்பனே, என் அண்ணி என் நெஞ்சில் அழியாத சிலையாக அமர்ந்து விட்டார்கள். அவர்களை நான் மறக்க முடியாது; என் மனக் கண்களை விட்டு மறைக்கவும் முடியாது; ஏன் தெரியுமா? அவர்கள் ஏற்றி வைத்துச் சென்ற அன்பு எனும் அகல் விளக்கு அந்தச் சிலைக்கு முன்னால் என்றும் அணையா விளக்காக எரிந்து கொண்டிருக்கிறது!

உன் அன்புள்ள,

—கண்ணன்

MURASOLI விலை-2-0

கடைசிப்பக்கம்

எழுத்தாணி

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:

(●) கதிரேசன்,

வாணியம்பாடி.

எஸ். எஸ். மணி, திருச்சி.

(?) தி. மு. க. இரண்டாவது மா்நில மாநாட்டைச் செய்திப் படமாக எடுப்பார்களா?

மகாமகத்து நிர்வாணக் காட்சியை படமாக்குபவர்கள் இதை எப்படி எடுப்பார்கள்!

துரை. முருகேசன், காரமடை.

(?) பண்டித நேருவுக்கு ஆண் குழந்தைகள் இருந்திருந்தால்?

மோகன் குமாரமங்கலத்தைப் போல அப்பாவுக்கு எதிராகக் கொடி உயர்த்தி இருப்பார்கள்!

இரா. பொன்முடி; பூண்டிலோயா

(?) கற்பு, காதல், ஒழுக்கம், மானம் என்றால் என்ன?

தமிழ்நாட்டுப் பெண்ணின் தனியுடைமை!

எஸ். ஏ. பழனிச்சாமி; கோவை.

(?) காமராசருக்குப் பெரியார் குருவா?

பிப்ரவரி 20-ம் தேதிதான் இதற்கு பதில் கூற வேண்டும்!

(?) வள்ளுவர் நூலுக்கு இல்லாத மதிப்பு கம்பனது ராமாயணத்துக்கு இருப்பானேன்?

வளர்ந்து பலன் கொடுக்கும் தென்னைக்கு இல்லாத மரியாதை சாதாரண துளசிச்செடிக்கு இருக்கிறதே—அந்தக்காரணம் தான்!

வி. நாதன் சென்னை-30

(?) திராவிடநாடு பிரிந்தால் பிச்சை எடுப்பவர்கள் இருப்பார்களா?

ஆமாம்; அன்புப் பிச்சை கேட்பவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்!

(●) கதிரேசன்; வாணியம்பாடி

(?) வாழ்க்கை என்பது என்ன?

அது ஒரு கண்ணாமூச்சு விளையாட்டு; திருட்டுத் தனமாய் விரலடுக்கால் பார்த்து ஓடுபவர்கள்தான் அதில் பெரும்பாலும் வெற்றி பெறுகிறார்கள்!

கே. ம. மணிவண்ணன்;

மண்ணடி.

(?) சிங்காதனத்தை ஏன் ஒருவர் பாம்புப் புற்றுக்கு ஒப்பிடுகிறார்?

அப்பாவித் தேரைகளின் சார்பாக வாதிட அவருக்கு உரிமையுண்டே; அதனால்தான்!

★ 6-ம் பக்கத் தொடர்ச்சி

தைத்தான் அப்படிக் குறிப்பிட நேரிடுகிறது!

அனைவருக்கும் பொதுவான பிரச்சினை—தாய். சித்திரவதை செய்யப் படுகிறாள்—அவ்வளவுதான் கூற முடியும்! தாயின் மானத்தைக் காப்பாற்றப் புறப்படுகிறீர்களா இல்லையா? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது தன்மானத்தைப் பற்றிக் கவலைப்படாத ஒரு சில தமிழர்களைப் பார்த்து!

அதோ வந்து விட்டது பிப்ரவரி இருபது! தமிழா! உன் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் பொன்னாள்!

தமிழனின் சரித்திரத்திலே ஏறிக் கொள்ளும் புதியவரி, பிப்ரவரி இருபது!

தாயகத்து மானங் காக்க, உடைமை மீட்க—எல்லாத் தமிழர்களும் ஒற்றுமைக் கொடியேற்றி வீர விழா எடுத்திடும் வைரத் திருநாள்!

பிப்ரவரி இருபது! மானமுள்ள தமிழா! மறந்து விடாதே! குல நெடுக்கும் நெடுந்தோளான் குலத்தினனே! குகை விட்டுப்புறப்படு புலியே! உயர்குண மேவிய தமிழா! உடனே புறப்படு!

கொழுத்துவிட்ட உமிகள் தான், குள்ளநரிக் கூட்டத்தார்; என்று குரல் எழுப்பு! குறள் வழிவந்தவனே! கொலுவீற்றிருந்த தமிழனே! உன் குரல் வளையை அழுத்துகின்ற இரும்புக் கரத்தை ஒடித்தெறி! உன் தலையை மிதிக்கின்ற தட்சிணப் பிரதேச யோசனையைத் தகர்த்து விடு! 'தேன் மலியும் காடு தேவிகுளம் பீர்மேடு! அஃதில்லையேல் செல்வேன் இடுகாடு!" என சூளுரைத்துக் கிளம்பு சூரனே! சுந்தரத் தமிழகத்தின் சொந்தக்காரனே! எதிர் காலம் உன்னை இகழாமலிருக்க—வருங்காலத்தின் சன்னதியிலே மானங்கெட்ட எலும்புக் கூடாக நீ தொங்காமலிருக்க—இப்போதே புறப்படு! அறப்போர்! அறப்போர்!

பாண்டியனின் நேர்மை உன் நெஞ்சிலே பதியட்டும்! சோழனின் வலிமை உன் தோளிலே தெரியட்டும்! சேரனின் வாள் வீச்சு, உன் கண்ணொளியிலே புலப்படட்டும்!

உன்னுடைய ரத்தத்தால் உன்னுடைய உரிமையை நிலை நாட்டிக் கொள்ளும் போர் வந்து விட்டது தமிழா!

கங்காணிகள் காலம் பார்ப்பர்; அமைதியைக் குலைக்க! அதற்கு இடங் கொடுத்து விடாதே! உன் கண்டனம் கண்டு, அரசாங்கம் அடக்குமுறைக்கணை தொடுக்கலாம்! அகன்ற மார்பகம் இருக்கிறது தமிழா உனக்கு! அதைக் காட்டு! துப்பாக்கி ரவைகள் உன் உடலைத் துளைத்தெடுக்கலாம்; ஆனால் அப்போதுகூட உன்னால் பிறருக்குத் துரும்பளவு துன்பமும் வராமல் பார்த்துக்கொள்! உன் குருதியால் தமிழ் மண்ணைக் குளிப்பாட்டு! உன்னையே...இல்லை இல்லை...நம்மையே நாம் அர்ப்பணித்துக் கொள்ளும் அறப்போர் மூண்டுவிட்டது! அதற்கான கொடியேற்று விழாதான் பிப்ரவரி இருபதில்! தமிழா! தயங்காதே! வெற்றி நமதே! வெற்றி! வெற்றி!! நமது கல்லறையிலாவது அந்த வார்த்தை எழுதப்பட்டே தீரும்! வெற்றி! வெற்றி!! முரசு முழங்கட்டும்!

அறப்போர் தொடங்கட்டும்!

தமிழகம் அமைதி காக்கட்டும்!!

பிப்ரவரி இருபது! வெற்றி! வெற்றி!!

★

25-ந் தேதியன்று

விற்பனைக்குக் கிடைக்கும்!

ராஜாராணி

(கதை வசனப் புத்தகம்)

★

விலை அணா 8

கழிவு 40 சத விகிதம்.

முத்தாரம் - பதிப்பகம்,

சென்னை - 6.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6